# வேதாந்த சஞ்ஞா.



காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,

திருப் பூவண மடம்.

058

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம.:

வீரசேகராய நம.:

# தாந்த சஞ்ஞா.

இது

விலூர் மடாதிபதியாக எழுந்தருளியிருந்த

திருக்களராண்டவ ரென்னும்

ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக சுவாமிகள்

அவர்கள் பாதசேகரராய

காசிகாநந்த சுவாமிக ளவர்களால்

ய வசந வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டு

மங்கலம் - ஷண்முக முதலியாரால்


சென்னை, கோமளேசுவரன் பேட்டை

சச்சிதாநந்தம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

1916. [விலை அணா 2.



# முகவுரை.

முன்னீரை வரம்பாகவுடைய இந் நிலவுலகின் கண் புருஷர்களால் விரும்பப்படும் தர்மார்த்த காம மோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள், அத்தியாவசியகமாக விரும்பப் படுவது மோக்ஷ மொன்றே யாம்; அதற்குச் சாதநமான சாஸ்த்திரங்களும் பலவுள; ஆயினும், மந்த புத்தியுடையோர்கட்குப் புலப்படுமாறு சம்ஸ்கிருதத்தில் வேதாந்த சம்ஞா வென்னும் பெயரினையுடைய கிரந்த மொன்று மிக வழகாகச் செய்யப்பட் டிருக்கின்றது. இதனை யியற்றியவர் இன்னவர் என்பது இதுகாறும் புலப்பட வில்லை. இதன்கண் வேதாந்த சாஸ்திரங்களில் வழங்கப்படும் பெயர்கள் 17 - ஆகத் தொகுக்கப்பட்டு, 144 எண்ணிக்கை யாகப் பிரிக்கப்பட்டு,பின் அவற்றிற்குப் பொருளும் கிரமமாக வெழுதப்பட் டிருக்கின்றது.

இதனை மூலமாகக்கொண்டு மூலச்சந்திர ஞானி என்னும் மஹான் ஹிந்தி பாஷையில் வேதாந்த பதார்த்தமஞ்ஜூஷா(வேதாந்த பதார்த்த நிகண்டு) என்னும் பெயருடன் அற்புதமாக ஒரு கிரந்த மியற்றி யிருக்கின்றனர். ஆயின், இதன் பெருமையை நாம் விரிக்கவேண்டுவ தில்லை என விடுத்தனம்.

இது தமிழ் மக்கட் குபயோகமாமாறு கோவிலூர் மடாதிபதியா எழுந்தருளி யிருந்த திருக்கள ராண்டவர் என்னும் ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிகசுவாமிகளவர்களின் பாதசேகரராய ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்களால் செவ்விய வசந வடிவமாக மொழி பெயர்க்கப்

பட்டு, மூலத்திலுள்ள பிழைபட்ட எண்களை எல்லாம் நன்கு பரிசோதித்துத் திருத்தப்பட்டுள்ளது.

வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷாவும் ஷை ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளாலே மொழி பெயர்க்கப்பட்டு அச்சாகி வருகின்றது; டிம்மி 50 பார அளவினதாகும்; விலை ரூபாய் 1—8—0 ஆகும். ம. ச.

## பாயிரம்.

திருவுடை முத்தி ராமநற் கனியைச் செகம்புகழ் துறவினை யுடைய, அருள்மிகு மருணா சலகுரு வினை நல்லாரிய சிதம்பரே சனைமற், றிருளெலாங் கெடுத்துப் புவியினிற் கீர்த்தி யிலங்கவே களரில்மா தேவப், பொருளினைப் புகன்று முத்தியைப் பெற்ற புனிதவீரேசனைப் பணிவாம்.

சீர்மிகுந் தேவ வாணியி லிருக்குஞ் செய்யவேதாந்தசஞ் ஞாவைப், பார்புக ழினிய தமிழினி லமைக்கப் பரிவுட னென்னையு மாண்ட,பேர்பெறும் வீர சேகர முநிவன் பிறங்குமென் னிருதயத் திருந்து, நார்மிகவிதனை விளக்கின னதனு னன்மையே தருமென வறிக.



உ

ஸ்ரீகணேசாய நம:.

# வேதாந்த சஞ்ஞா.

செய்ய வாரியன் றிருவடி யிணைதமைப் பணிந்து
அய்ய மில்லவ னரும்பிர சாதத்தைக் கொண்டு
துய்ய தன்மைவே தாந்தசஞ் ஞாவினைத் துலங்கச்
செய்ய வேபகுத் தெம்மதி யளவிற் றெரிப்பாம்.

அத்தியாரோப அபவாதங்களால் நிஷ்பிரபஞ்சம் விஸ்தரிக்கப்படுகின்றதென்னும் பெரியோர் கொள்கையினால், ஈண்டு அத்தியாரோபம் வஸ்துவின்கண் அவஸ்துவின் ஆரோபமாம். வஸ்து சச்சிதாநந்த ரூபப் பிரஹ்மமாம். அவஸ்து அஞ்ஞாநாதி சர்வ ஜட சமுதாய சொரூப மகாப் பிரபஞ்சமாம்.

### 2 தொகுதியாய வஸ்துக்கள்.

**1**—1. பிரபஞ்சம், 2. அஞ்ஞானம், 3. சூக்ஷ்ம சரீரம், 4. ஸ்தூல சரீரம், 5. சக்தி, 6. மோக்ஷம், 7. சம்சயம், 8. அசம்பாவனை, 9. விபரீதபாவனை, 10. பிரக்ஞை, 11. சமாதி, 12. பரமஹம்ச சந்யாசம், 13. வித்வத் சந்யாசம், 14. நிக்ரகம், 15. அஹங்காரம், 16. அத்யாத்ம தாபம், 17. சப்தம், 18. கந்தம்.

3 தொகுதியாய வஸ்துக்கள்.

**2**—1. பிரஹ்மம், 2. ஜீவன், 3. சரீரம், 4. அவஸ்தை, 5. காரணம், 6. கர்மம், 7. புண்ய கர்மம், 8. பாப கர்மம், 9. மிஸ்ர கர்மம், 10. பிராரத்தம், 11. பிரதிபந்தம், 12. சம்பந்தம், 13. தாபம், 14. அத்யாத்மியாதி, 15. காரணம்,16. குணம், 17. காலம், 18. மூர்த்தி, 19. ஞாதாதி, 20. பிரபஞ்சம், 21. லோகம், 22. ஞானப் பிரதிபந்தம், 23. வாசனை, 24. சிரவணுதி, 25. ஞானுதி, 26. ஹேத்வாதி, 27. பிராணுயாமம், 28. ஆந்தியாதி, 29. தாதாத்மியம், 30. ஏஷணை, 31. சுழுத்தியாதி, 32. ஆநந்தம், 33. கர்மம், 34. ஜாக்ரம், 35. ஸ்வப்நம், 36. சுழுத்தி, 37. ஆத்மா, 38. ஸ்வர்க்கலோக தாபம், 39. நாதாதி.

4 தொகுதியாய வஸ்துக்கள்.

**3**—1. வர்த்தமானப் பிரதிபந்தம், 2. புருஷார்த்தம், 3. சப்தப் பிரவிர்த்தி, 4. வர்ணம், 5. ஆஸ்ரமம், 6. சாதநம், 7. அந்தக்கரணம், 8. அநுபந்தம், 9. சங்கல்பாதி, 10. வேதம், 11. பிரமாணம், 12. விக்நம், 13. மைத்ரியாதி, 14. பூதக்கூட்டம், 15. பிரஹ்மவித்தாதி, 16. சந்யாசம், 17 பூமிகை, 18. யுக்தி, 19. ஸ்பரிசம்.

5 தொகுதியாய வஸ்துக்கள்.

**4**—1. கோசம், 2. ஞானேந்திரியம், 3. சப்தாதி, 4. கர்மேந்திரியம், 5. வசனுதி, 6. பிராணுதி, 7. உபவாயு, 8. கர்மம், 9. சூக்ஷ்ம பூதம், 10. ஸ்தூல பூதம், 11. யமம், 12. நியமம், 13. பூமிகை, 14. பிரளயம்,15. பிராந்தி, 16. நிவர்த்தக திருஷ்டாந்தம், 17. திருஷ்டாந்தம், 18. கியாதி, 19. கிலேசம்.

6 தோகுதியாய வஸ்துக்கள்.

**5**—1. சமாதி, 2. அரி(சத்ரு), 3. (ஷட்)பாவவிகாரம், 4. கோசம், 5. ஊர்மி, 6. லிங்கம், 7. அவஸ்தை, 8. சாஸ்திரம், 9. சூத்திரம், 10. அங்கம், 11. கர்மம், 12. சம முதலியன, 13. அஜிஹ்வாதி, 14. புறமதம், 15. பிராந்தி, 16. ரூபம், 17. ரசம், 18. ஐஶ்வர்யாதி, 19. உத்பத்தியாதி.

7 தோகுதியாய வஸ்துக்கள்.

**6**—1. அவஸ்தை, 2. சைதந்யம், 3. பூராதி, 4. அதலாதி, 5. பூமிகை, 6. மௌநாதி, 7. தாதுக்கள், 8. வியசநம்.

8 தோகுதியாய வஸ்துக்கள்.

**7**—1. புரி, 2. பிரகிருதி, 3. (அஷ்ட) அங்கம், 5. அந்தரங்க மதம், 6. மூர்த்தி மதம், 7. பாசம்.

9 தோகுதியாய வஸ்துக்கள்.

**8**—1. சம்சாரம், 2. வர்ணம்.

10 தோகுதியாய வஸ்துக்கள்.

**9**—1. நாடிகை,2. நாடிதேவதை, 3-வாயுக்களின் வர்ணம்.

15 தோகுதியாய வஸ்துக்கள்.

**10**—1. தேவதை, 2. அஸ்தியாதி.

16 தோகுதியாய வஸ்துக்கள்.

**11**—1. ராகாதி, 2. லிங்கம்.

17 தோகுதியாய வஸ்து.

**12**—1. *லிங்கம்.*

19 தொகுதியாய வஸ்து.

**13**—1. *லிங்கம்.*

24 தொகுதியாய வஸ்துக்கள்.

**14**—1. *தத்துவங்கள்.*

36 தொகுதியாய வஸ்துக்கள்.

**15**—1. *தத்துவங்கள்.*

75 தொகுதியாய வஸ்து.

**16**—1. *குணம்.*

96 தொகுதியாய வஸ்துக்கள்.

**17**—1. *தத்துவங்கள்.*

*இவ்வெல்லாச் சஞ்ஞை (பெயர்)களும் சாஸ்த்ரஞ்ஞர்களால் உதாகரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பிரத்தியேகம் நிரூபிக்கின்றேன்.*

*சதசத்துக்களால் அநிர்வசநீயமாய், முக்குணரூபமாய், ஞாந விரோதியாய், நான் அஞ்ஞன் மோகிதன் என்னும் அநுபவ பலத்தினால் பாவரூபமாகக் கூறும் அஞ்ஞாநம், மூலகாரணமாகலானும், சத்வ ரஜஸ் தமோகுணங்களின் சாம்யாவஸ்தா ரூபமாகலானும், மூலப்பிரகிருதி யென்றும், பிரளய அவஸ்தை யென்றும், அவ்யக்த மென்றும், அவ்யாகிருதம் என்றும், மகாசுழுத்தி என்றும், நிர்விகாரத் தன்மையாக விருத்தலின் கூடஸ்த மென்றும், ஞாந மின்றி நாச மின்மையின் அக்ஷர மென்றுங் கூறப்படுகின்றது.*

ஸ்தூல, சூக்ஷ்ம, காரணப் பிரபஞ்சங்களினது சமஷ்டி மகாப் பிரபஞ்சமாம்.

௧—1. பாஹ்யப் பிரபஞ்சம், ஆந்தரப் பிரபஞ்சம் எனப் பிரபஞ்சம் இருவகைத்து.

(1) பிருதிவியாதி பஞ்ச மகாபூதங்களும், அவற்றினின் றுண்டாய பிரஹ்மாண்டமும், அதனந்தர்ப்பூதமேன்மேலுள்ள பூ, புவ, ஸ்வ, மஹ, ஜந, தப, ஸத்யமென்னும் பெயரையுடையதும், கீழ்க்கீழுள்ள அதல, விதல, ஸுதல, தலாதல, மஹாதல, ரஸாதல, பாதாளமென்னும் பெயரை யுடையதுமாய சதுர்த்தச புவநங்களும், அவற்றின்கண் ணுள்ள ஜராயுஜ, அண்டஜ, ஸ்வேதஜ, உத்பிஜ்ஜமாய சதுர்வித பூதக்கிராம ஸமுதாயமும், யோக்யமாய நாநாவித நாம, ரூப, குண, தர்ம, சக்தி ஆச்ரயமும் பாஹ்யப் பிரபஞ்சமாம்.

(2) அந்நமயாதி பஞ்சகோசமும், ஸ்தூலாதி சரீரத்திரயமும், அஸ்தியாதி ஷட்பாவ விகாரமும், த்வக், மாம்ஸாதி ஷட்கௌசிகமும், உண்டல் குடித்தலாதிய ஷூர்மியும், சுரோத்திராதி ஞாநேந்திரிய பஞ்சகமும், வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகமும், பிராணுதி வாயு பஞ்சகமும், மனுதி அந்தக்கரண சதுஷ்டயமும், ஸங்கல்பாதி அந்தக்கரண விருத்தி அவஸ்தாத் திரயமும், அதன் வியாபாரமும், அதன் அபிமானி விப்வ, தைஜஸ, பிராக்ஞனும், ஸமாதி, மூர்ச்சை கரணத் திரயமும், காமக் குரோதாதி அரிஷட்வர்க்கமும், சாதந சதுஷ்டய, ஸத்வாதி குணத்திரயமும், ஸுக துக்க ஞாந அஞ்ஞாநாதி பஞ்சக்கிலேச, மைத்திரியாதி சதுஷ்டய, யமாதி அஷ்டாங்க, பிரத்தியக்ஷாதி பிரமாண சதுஷ்டய, ரோகாரோக்கியாதி ஸமுதாயமும், யோக்கிய

மாய நாநாவித நாம ரூப குண தர்ம சக்தி யாஶ்ரய முமூ ஆந்தரப் பிரபஞ்சமாம் என விவேகிக்க.

**1—2** ஸமஷ்டி அஞ்ஞாநம், வியஷ்டி அஞ்ஞாநம் என அஞ்ஞாநம் இருவகைத்து.

அஞ்ஞாநத்திற்கு ஸமஷ்டி அபிப்பிராயத்தால் ஏகத்துவம் கூறியதாம்; வியஷ்டி அபிப்பிராயத்தால் நாநாத்வம் கூறியதாம்.

(1) ஸமஷ்டி அஞ்ஞாநம் ஈசுவர உபாதியாம்; உத்கிருஷ்ட உபாதித் தன்மையால் விசுத்த ஸத்வப் பிரதான மாயையாம். அகில காரணமா யிருத்தலின் காரண சரீரமாம். ஆநந்தம் மிகுதியாகலானும், கோசம் போன்று ஆத்மாவை மறைத்தலானும், ஆநந்தமயகோச மாம். எல்லாவற்றிற்கும் முடிவிடமாகலின் சுழுத்தியாம். இதனையே ஸமஷ்டி, ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீர லய ஸ்தான மென்றும் கூறப்படுகின்றது.

(2) வியஷ்டி அஞ்ஞாநம் ஜீவ உபாதியாம். இந்த வியஷ்டி நிகிருஷ்ட உபாதித்தன்மையால் மலிந ஸத்வப் பிரதான அவித்தையாம். அஹங்காராதி காரணமாகலின் காரண சரீரமாம். ஆநந்த மிகுதியேயான ஏதுவானும், கோசம் போன்று ஆத்மாவை மறைத்தலானும் ஆநந்த மய கோசமாம். எல்லாவற்றிற்கும் முடிவிடமாகலின் சுழுத்தியாம். இதனையே வியஷ்டி, ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீர லய ஸ்தான மென்றுங் கூறப்படுகின்றது.

**1—3.** ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரம், வியஷ்டி ஸூக்ஷ்ம சரீரம் என ஸூக்ஷ்ம சரீரம் இருவகைத்தாம்.

(1) ஸர்வ ஸூக்ஷ்ம சரீரமும் யேகபுத்தி விஷயத் தன்மையால் வநம் போன்று அல்லது ஜலாசயம் போன்று சமஷ்டியாம்; அநேக புத்தி விஷயத்தன்மையால் விருக்ஷம் போன்று அல்லது ஜலாசயம் போன்று வியஷ்டியும் ஆகின்றது. ஸமஷ்டி காரண சரீரத் தன்மையால் அஞ்ஞாந உபாதிரூப ஸகல ஸூக்ஷ்ம சரீரமும் ஹிரண்யகர்ப்ப உபாதியாம்; விஞ்ஞாநமயாதி கோசத் திரயமாம்; ஜாக்கிர வாசனாமயமாகலின் ஸ்வப்நமாம். இதனானே ஸமஷ்டி தஸ்தூலப் பிரபஞ்ச லயஸ்தான மென்றுங் கூறப்படுகின்றது.

(2) முற்புகன்ற வியஷ்டி காரண சரீரத்தன்மையால், அஞ்ஞாந உபாதிரூப சகல சூக்ஷ்ம சரீரமும், அநேக புத்தி விஷயத்தன்மையால், வியஷ்டி சூக்ஷ்ம சரீரம் தைஜச உபாதிரூபமாம். விஞ்ஞாந மயாதி கோசத் திரயமாம். இதனானே, வியஷ்டி ஸ்தூலப் பிரபஞ்ச லய ஸ்தான மென்றும் கூறப்படுகின்றது.

1—4. ஸமஷ்டி ஸ்தூல சரீரம், வியஷ்டி ஸ்தூல சரீரம் என ஸ்தூல சரீரம் இருவகைத்து.

(1) ஜராயுஜ, அண்டஜ, ஸ்வேதஜ, உத்பிஜ்ஜ மென்னும் பெயரிய சதுர்வித சகல ஸ்தூல சரீரமும் வநம் போன்று அல்லது ஜலாசயம் போன்று ஏகபுத்தி விஷயமாகலானும், ஸூக்ஷ்ம சரீர அபேக்ஷையால் ஸ்தூலமாகலானும் ஸமஷ்டி ஸ்தூல சரீரமாம். விராட்டிற்குபாதியுமாம். அந்ந விகாரமாகலானும்; கோசம் போன்று ஆத்மாவை மறைத்தலானும் அந்நமய கோசமாம். ஸ்தூல போக அயதனமாகலானும் ஜாக்கிரம் என்றும் கூறப்படுகின்றது.

(2) முற்புகன்ற நால்வகைத்தாய ஸ்தூல சரீர மெல்லாம் விருக்ஷம் போன்று, அல்லது ஜலாசமயம்போன்று அநேக புத்தி விஷயமாகாலனும், ஸூக்ஷ்ம சரீர அபேக்ஷையால் ஸ்தூலமாகலனும், வியஷ்டி ஸ்தூல சரீரமாம்; விஸ்வ உபாதியாம்; அந்நவிகாரமாய ஹேதுவானும், சோசம் போன்று ஆத்மாவை மறைத்தல் நியாயத்தானும் அந்நமய கோசமாம். ஸ்தூல போக அயதனமாகலால் ஜாக்கிரம் என்றும் கூறப்படுகின்றது.

**1**—5. ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி யென சக்தி இருவகைத்து.

(1) அந்தர் திருக் திருசியத்தின் பேதத்தை, அல்லது பாஹ்யத்தின் பிரஹ்ம சர்க்கத்தின் பேதத்தை, அல்லது தனது சொரூபமாக அறியும் புத்தியை, அல்லது அகண்ட சச்சிதாநந்தத்தை ஆவரணஞ் செய்வது ஆவரண சக்தியாம்.

(2) வேறு வேறு சொரூபமாக உண்டாவது விக்ஷேப சக்தியாம்.

**1**—6. அநர்த்த நிவிர்த்தியும், ஆநந்தப் பிராப்தியும் என மோக்ஷம் இருவகைத்தாம்.

**1**—7. பிரமாணகத சம்சயமும், பிரமேயகத சம்சயமும் என சம்சயம் இருவகைத்தாம்.

(1) அங்ஙனமன்றோ, சுருதிகளாற் கர்மம் போதிக்கப்படுகின்றதா? அல்லது சித்தப் பிரஹ்மம் பிரதிபாதிக்கப்படுகின்றதா என்னும் இவ்வித ரூப சித்தவிருத்தி பிரமாணகத சம்சயமாம்.

(2) பிரஹ்மம் ஜகத்காரணமா? அல்லது பிரதானுதிகமா? என்னும் இவ்விதரூப சித்த விருத்தி பிரமேயகத சம்சயமாம்.

**1**—8. பிரமாணகத அசம்பாவனே, பிரமேயகத அசம்பாவனே என அசம்பாவனே இருவகைத்து.

(1) பிரஹ்மம் சித்தமா யிருத்தலின் பிருதிவியாதி போன்று பிரமாணாந்தரத்தால் அறியப்படுந்தன்மை யில் சுருதி, சித்தப்பிரஹ்மத்தைப் பிரதிபாதிப்ப தெங் ஙனமாம்? பல மின்மையால் பிரதிபாதிப்பதே இன்று என்னும் நிச்சயரூப சித்த விருத்தி, பிரமாணகத அசம் பாவனேயாம்.

(2) பிரஹ்மம் ஜகத் விலக்ஷணரூபமாக ஸ்திதமாக வின், ஜகத் காரணத்துவம் எங்ஙனம் சம்பவிக்கும்? சம்பவிப்பதே யின்று என்னும் நிச்சயரூப சித்த விருத்தி, பிரமேயகத அசம்பாவனேயாம்.

**1**—9. பிரமாணகத விபரீதபாவனே, பிரமேயகத விபரீதபாவனே என விபரீதபாவனே இருவகைத்து.

(1) பிரஹ்மம் சித்தமாகலின், சுருதிகள் அதனைப் பிரதிபாதிப்பதில் நிஷ்பலைத்தன்மைப் பிரசங்கத்தால், சுருதிகள் கர்ம பரமே என்னும் நிச்சயம், பிரமாணகத விபரீத பாவனேயாம்.

(2) காரண காரியமாகிய தந்து படங்கட்குச் சமான ரூபத்தன்மை பார்க்கப்படுகின்றது. இதனல் ஜகத் திற்கும் பிரஹ்மத்திற்கும் சமானரூபத்தன்மை இன் மையால், ஜகத்காரணம் பிரதானாதியே என்னும் நிச்ச யம், பிரமேயகத விபரீதபாவனேயாம்.

(i) இங்ஙனம் ஆந்தரத்திலுமாம். அங்ஙனமன்றே, ஜகத் அந்தர்யாமிகட்கும் ஜகத் விலக்ஷண பிரஹ்மத்து வம் இருக்கின்றதா? அல்லது இன்று? எனப் பிரத்திய காத்ம விஷய சம்சயமாம்.

(ii) கர்த்ருத்துவாதி அநேகதர்ம விசிஷ்ட எனக்கு அகர்த்ரு பிரஹ்ம சொரூபத்தன்மை எங்ஙனம் உண்டாம்? உண்டாவதே இன்று என்னும் நிச்சயரூப சித்த விருத்தி, பிரத்தியகாத்ம விஷயக அசம்பாவனையாம்.

(iii) நான் அகர்த்தாவாயினே எனக்குச் சாஸ்திரத்தால் "உன்னால் செய்யத்தக்கது" என எங்ஙனம் கர்மோபதேசமாம். இதனால் கர்த்தா வென்னும் நிச்சய ரூப சித்த விருத்தி, பிரத்தியக் விஷய விபரீதபாவனையாம்.

1—10. ஸ்திதப் பிரக்ஞை, அஸ்திதப் பிரக்ஞை எனப் பிரக்ஞை இருவகைத்து.

1—11. ஸம்பிரக்ஞாத சமாதியும், அசம்பிரக்ஞாத சமாதியும் எனச் சமாதி இருவகைத்து.

1—12. விவிதிஷா சந்நியாசமும், வித்வத் சந்நியாசமும் எனப் பரமஹம்ஸ சந்நியாசம் இரண்டாம்.

1—13. நக்நனு யிருத்தலும், கமண்டலதாரியும் என வித்வத் சந்நியாசம் இருவகைத்தாம்.

1—14. கிரம நிக்ரஹமும், ரூட (ஒருமுறை) நிக்ரஹமும் என நிக்ரஹம் இருவகைத்தாம்.

1—15. ஸாமாந்ய அஹங்காரமும், விசேஷ அஹங்காரமும் என அஹங்காரம் இரண்டாம்.

1—16. மாநஸ தாபம், சாரீர தாபம் என ஆத்யாத்மிக தாபம் இரண்டாம்.

(1) ஜ்வரம், குல்மம் முதலிய தோஷத்தால் சம்பாதித்த தாபம் சாரீரமாம்.

• (2) அஸூயை, மதம், மாத்ஸர்யம் முதலியவற்றால் ஸம்பாதித்த சித்தவியாகூலத் தன்மையே மாநஸ தாபமாம்.

**1**—17. அக்ஷர, அநக்ஷர பேதத்தால் சப்தம் இருவகைத்தாம்.

**1**—18. நற்கந்த துர்க்கந்த பேதத்தால் கந்தம் இருவகைத்தாம்.

**2**—1. ஒரே அத்விதீயப் பிரஹ்மம், சமஷ்டி ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீர உபாதியால் விராட், ஹிரண்யகர்ப்பன், ஈஶ்வரன் என்று கூறப்படுகின்றது. இதுவே பிரஹ்மத் திரயமாம்.

(1) பிரஹ்மம், ஈஶ்வரன், சாக்ஷி, பரமாத்மா, கூடஸ்தன், அக்ஷரம், ஜக ததிஷ்டாநம், ஜகத்நிஷேத அவதிபூதம் என்றும் வியவகரிக்கப்படுகின்றது. பிருகத்தாகலானும், பிருங்கணத்வமாகலானும், பிரஹ்மமாம். பிருஹத்வம் வியாபகத்வமாம். பிருங்கணத்வம் சரீர விருத்தியாதி ஹேதுத்வமாம் என விவேகிக்க. ஸமஷ்டி ஸ்தூல சரீர உபாதியுடைய சைதந்யம் நாநாவிதமாய் விளங்குதலின் விராட்டாம். உலகத்தினுள்ள எல்லா நரர்களிடத்தும் நான் என அபிமானித்தலான்வைஶ்வாநரனும், விசேஷமாக விளங்குதலின் விராட் எனவுங் கூறப்படுகின்றது.

(2) ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரமுடைய சைதந்யம் ஞாந சக்தியுடைமையின், ஹிரண்ய கர்ப்ப னென்றும், முத்தினுள் சூத்திரம் போன்று, ஸமஸ்தப் பிரபஞ்சத்தினும் அநுஸ்யூதமா யிருத்தலின் சூத்திராத்மா வென்றும், கிரியா சக்தியுடைமையின் பிராணன் என்றும் கூறப்படுகின்றது.

(3) ஸமஷ்டி அஞ்ஞாந உபாதியுடைய சைதந்யம், ஸமஸ்தப் பிராணிகளையும் நியமித்தலால், ஈஶ்வரனும். ஸமஸ்த பிராணிகளின் ஹிருதயத்திலிருந்து கொண்டு ஸமஸ்தப் பிராணிகளின் கர்மப் பிரேரகத்தன்மையால் அந்தர்யாமியாம். ரூப ரகிதமாகலின், அவ்யாகிருதமாம்; ஸகல அஞ்ஞாந அதன் காரியத்தையும் விளக்குதலால், ஜகத் காரணமென்றும், எப்பிரமாணத்தானும் விளக்கப் படாமையின், அவ்யக்த மென்றும் கூறப்படுகின்றது.

**2**—2. ஒரே பிரத்தியகாத்மா, வியஷ்டி, ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீர உபாதியுடைமையால், விஶ்வ, தைஜஸ, பிராக்ஞ ரென்றுங் கூறப்படுகின்றது. இதுவே ஜீவத் திரய மென்னும் வியவகாரமாம்.

பிரத்தியகாத்மா, சரீரத்திரய அதிஷ்டாநம், ஜீவன், சாக்ஷி, கூடஸ்தன், நாச மின்மையின் அக்ஷரம், சித், சைதந்யம், சிதி என்பன பரியாயங்களாம்.

விலக்ஷணமாய் விளங்குதல் பிரத்யக்காம். அங்ஙன மன்றே, அநிர்த ஜட துக்காத்மக அஹங்காராதிகளி னின்றும் விலக்ஷணத்தன்மையால், சச்சிதாநந்த ரூபத்தால் விளங்குவது பிரத்தியக்காம்; ஆகவே அஹங்காரம் ஆத்மா வன்று. தேகம் ஆத்மா வன்று. இந்திரியங்கள் ஆத்மா வல என்று இங்ஙனம் நிக்ருஷ்ட அஹங்காராதி சைதந்நியம், பிரத்தியக் கென்பது பொருளாம்.

சரீர மிரண்டின் உபாதான வியஷ்டி அஞ்ஞாந கற்பனையின் அதிஷ்டாநமாகலின் சரீரத்திரய அதிஷ்டாநமாம்.

தன்னிடத்து அத்தியஸ்தமான பதார்த்தங்களை விருத்தியின் வியவதான மின்றிச் சாக்ஷாத் அபரோக்ஷமாகப் பிரகாசித்தலின் சாக்ஷியாம்.

(1) வியஷ்டி ஸ்தூல சரீர உபாதியுடைய ஆத்மா, ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீர அசமஸ்த அபிமானியாகலின், விஶ்வ னென்றும், ஸூக்ஷ்ம சரீரத்தை விடாது ஸ்தூல சரீரத்தில் பிரவேசித்திருத்தலானும், விஶ்வ னென்றும், ஸமஸ்த வியவகாரஞ் செய்தலான், வியாவகாரிகன் என்றும், சித்துப் போல விளங்கியும் சித்து இலட்சண மின்மையால் சிதாபாசன் என்றுங் கூறப்படுகின்றது.

(2) வியஷ்டி ஸூக்ஷ்ம சரீர உபாதியுடைய ஆத்மா, தேஜோமய அந்தக்கரண விருத்தி வசிஷ்டமாகலின், தேஜஸின் வாசனையின்கண் நான் எனது என்னும் அபிமானத்தன்மையால் திருப்தியா யிருக்கின்றது என்னும் வியுத்பத்தியால், தைஜஸன் என்றும், பிரதீதி காலமாத்திரத்தி லிருத்தலால் பிராதி பாஸிக னென்றும், அஞ்ஞாந காரிய நித்ரா சக்தியாற் கற்பிக்கப்படுதலின், ஸ்வப்ந கற்பிதன் என்றும் கூறப்படுகின்றது.

(3) வியஷ்டி அஞ்ஞாந உபாதியுடைய ஆத்மா, சரீரமிரண்டின் உபாதான வியஷ்டி அஞ்ஞாந அதன் காரியத்தை விளக்குதலால், அஸ்பஷ்ட உபாதிரூபத்தன்மையால் மிகப் பிரகாச மின்மையின், பிரக்ஞா ரூப சைதந்யம் பிரதான புருஷனுகலானும், பிராக்ஞன் என்றும், அவஸ்தாத் திரயத்தின்கண் அநுஸ்யூதத் தன்மையாயிருத்தலின், பாரமார்த்திகன் என்றும், அவித்தை, அஹங்கார, தேகாதி, உபாதி பரிச்சிந்நத்தன்மையால் விளங்குதலின், அவச்சிந்ந மென்றுங் கூறப்படுகின்றது.

2—3. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண மெனச் சரீரம் மூன்றும்.

**2**—4. ஜாக்ர, ஸ்வப்ந, ஸுஷுப்தி அவஸ்தை யென அவஸ்தை மூன்றும்.

**2**—5. மனோ,வாக்,காயங்கள் என மூவித காரண (கரண) ங்களாம்.

**2**—6. புண்ணிய, பாப,மிஶ்ர கர்மங்கள் எனக் கர்மத் திரயமாம்.

**2**—7. புண்ணியோத்கர்ஷ, புண்ணிய மத்திம, புண்ணிய சாமாந்ய மெனப் புண்ணிய கர்மம் மூன்றும்.

(1) புண்ணியோத்கர்ஷ ரூபகர்மத்திற்கு,ஹிரண்ய கர்ப்ப சரீரப் பிராப்தி பலமாம்.

(2) புண்ணிய மத்திமரூப கர்மத்திற்கு,இந்திராதி சரீரப் பிராப்தி பலமாம்.

(2) புண்ணிய ஸாமாந்ய ரூப கர்மத்திற்கு, யக்ஷ ராக்ஷஸாதி சரீரப் பிராப்தி பலமாம்.

**2**—8. பாபோத்கர்ஷ, பாப மத்திம, பாபஸாமாந்ய மெனப் பாப கர்மம் மூன்றும.

(1) பாபோத்கர்ஷத்திற்கு, அந்நியரைத் தாபஞ் செய்யும் முள் விருக்ஷம், குல்மம்,தேள்,யூகம்,வநமக்ஷிகை முதலிய சரீரப் பிராப்தி பலமாம்.

(2) பாபமத்திமத்திற்கு,மா,பலா,தென்னை,மகிஷ, அசுவ, கழுதை முதலிய சரீரப் பிராப்தி பலமாம்.

(3) பாப ஸாமாந்யத்திற்கு, பசு, ஆடு, அரச விருக்ஷம், துளஸீ முதலிய சரீரப் பிராப்தி பலமாம்.

**2**—9. மிஶ்ரோத்கர்ஷ, மிஶ்ர மத்திம, மிஶ்ர ஸாமாந்ய மென மிஶ்ர கர்மம் மூன்றும்.

(1) மிஸ்ரோத்கர்ஷத்திற்கு,நிஷ்ம காம கர்மாநுஷ்டானுதி.நிர்விகல்ப ஸமாதி பர்யந்தமான யோக்யசரீரப் பிராப்தி பலமாம்.

(2) மிஸ்ர மத்திமத்திற்கு,தனது ஆஸ்ரமத்திற்கு உசிதமான காம்யகர்ம யோக்ய சரீரப்பிராப்தி பலமாம்.

(3) மிஸ்ர ஸாமாந்யத்திற்கு,சண்டாளன்,வேடன் முதலிய சரீரப் பிராப்தி பலமாம்.

மனோ, வாக், காய பேதத்தால், காமாதிகளால் பிரேரிக்கப்பட்ட மனோ, வாக், காயங்களா லியற்றிய கர்மோத்கர்ஷாதிகளின் பேதத்தால், கர்மமும் அதன் பலமும் அநேகவித மென வறிக.

௨—10. இச்சாப் பிராரப்தம், பரேச்சாப் பிராரப்தம், அநிச்சாப் பிராரப்தம் எனப் பிராரப்தம் மூன்றாம்.

(1) அஃதெங்ஙனம்? தனது இச்சையால் இயற்றிய பிக்ஷை வாங்கல் முதலியன இச்சாப் பிராரப்தமாம்.

(2) ஸமாதியவஸ்தையில்சிஷ்யராதியோராற் கொடுக்கப்பட்ட அன்னாதிகள் பரேச்சாப் பிராரத்தமாம்.

(3) ஸமாதி யவஸ்தையின்கண், அல்லது வியுத்தான அவஸ்தையின்கண் ஆகாசத்திலிருந்து பழம் விழுவது போன்று, காரண மின்றி உண்டாய கல்விழுதல், முட்டைத்தலாதி அநிச்சாப் பிராரப்தமாம். வியுத்தாநம் - வெளிப்படுதல்.

௨—11. பூதப் பிரதிபந்தம், வர்த்தமானப் பிரதிபந்தம், ஆகாமிப் பிரதிபந்தம் என ஞானத்தைப் பிரதிபந்தஞ் செய்யும் பிரதிபந்தம் மூன்றாம்.

(1) சிரவண மநனாதி காலத்தில் சர்வ ஜடவஸ்து ஸாக்ஷாத்காரம் பூதப் பிரதிபந்தமாம்.

(2) பாப கர்மத்தாற் ஜனித்துக் காரியத்தாற் அநுமிக்கற்பாலது வர்த்தமானப் பிரதிபந்தமாம்.

(3) ஒரு புருஷனிடத்தில் தயை, விஸ்வாஸாதி முதலியவைகளால் ஆரூடமான சக்தியை உண்டாக்கும் பிராரப்த சேஷம் யாது, அஃது ஆகாமிப்பிரதிபந்தமாம். அது ஜடபரதாதிகளினிடத்துப் பிரசித்தமாம்.

௨—12. ஸம்யோக ஸமவாயம், ஆத்தியாஸிகம், தாதாத்மிய ஸம்பந்தம் என ஸம்பந்தம் மூன்றும்.

அல்லது, காரிய காரண பாவம், விஷய விஷயி பாவம், ஆதாராதேய பாவ மென ஸம்பந்தம் மூன்றும்.

அல்லது,பதங்கட்கு ஸாமாநாதிகரண்யமும்,பதார்த்தங்கட்கு விசேஷண விசேஷிய பாவமும், பிரத்யகாத்ம லக்ஷணங்கட்கு, லக்ஷிய லக்ஷண பாவமும் என ஸம்பந்தம் மூன்றும்.

(1) தத்துவமஸ்யாதி வாக்கியம் லக்ஷணம் என்பது பொருளாம். இத் தத்துவமஸி என்னும் வாக்யம் முச்சம்பந்தத்தால், அகண்டார்த்தத்தைப் போதிக்கின்றது. மூன்று ஸம்பந்தங்களின் பெயர், பதங்கட்கு ஸாமாநாதிகரண்யமும், பதார்த்தங்கட்கு விசேஷண விசேஷிய பாவமும், பிரத்யகாத்ம லக்ஷணங்கட்கு லக்ஷிய லக்ஷண பாவமுமாம். அது "ஸாமாநாதிகரண்யமும், விசேஷண விசேஷியத் தன்மையும்,லக்ஷிய லக்ஷண ஸம்பந்தமும், பதார்த்த பிரத்யகாத்மாகட்காம்." எனக் கூறப்பட்டிருக்கின்றது. * ஸாமாநாதிகரண்ய ஸம்பந்தம்,எங்ஙனம்? ஸோயம் தேவத்தத்தன்

---

* பின்ன பின்ன சப்தங்கட்கு ஒரு அர்த்தத்தில் பிரவிருத்தி சாமாநாதிகரண்யமாம்.

• என்னும் வாக்கியத்தில், அக்கால விசிஷ்ட தேவதத்த வாசகசப்தத்திற்கும், இக்கால விசிஷ்டதேவதத்தவாசக சப்தத்திற்கும் ஒரு பிண்டத்தின்கண் தாத்பர்ய ஸம்பந்தமாம். ஆகவே தத்துவமஸி என்னும் வாக்கியத்தில் பரோக்ஷத்துவாதி விசிஷ்ட சைதந்ய வாசக தத்பதத்திற்கும், அபரோக்ஷத்துவாதி விசிஷ்ட சைதந்ய வாசக த்வம் பதத்திற்கும் ஒரு சைதந்யத்தின்கண் தாத்பர்ய சம்பந்தம் உளது.

(2) * விசேஷண, விசேஷிய பாவ ஸம்பந்தம் எங்

---

* வியாவர்த்தகம் விசேஷணம், வியாவர்த்தியம் விசேஷ்யம். ஆகவே ஸோயம் தேவதத்தன்என்னும்வாக்கியத்தில் அயம் சப்தவாச்சியமாய இந்தக் கால இந்தத் தேச சம்பந்த தர்ம விசிஷ்ட தேவதத்த பிண்டமானது, ஸ சப்தவாச்சிய அக்கால அத்தேச சம்பந்த தர்ம விசிஷ்ட தேவதத்த பிண்டத்தி னின்றும் பின்ன மன்று என்று எப்பொழுது பிரதீதியாகின்றது, அப்பொழுது தத்சப்தார்த்தத்திற்கு அயம் சப்தவாச்சியார்த்தின்கண் ணுள்ள பேத வியாவர்த்தகத் தன்மையால், விசேஷணத் தன்மை, அயம் சப்தார்த்தத்திற்கு வியாவர்த்தியத் தன்மையால் விசேஷ்யத் தன்மையாம்.

ஸ என்னும், தத் சப்தவாச்சிய அக்கால அத்தேச விசிஷ்ட தேவதத்த பிண்டமானது, இதம் சப்த வாச்சிய இக்கால இத்தேச சம்பந்த விசிஷ்ட இத்தேவதத்த பிண்டத்தினின்றும் பின்ன மன்று என்று எப்பொழுது பிரதீதியாகின்றது, அப்பொழுது அயம் சப்தவாச்சியத்திற்குத் தத் சப்தார்த்தத்தின்கண்ணுள்ள பேதவியாவர்த்தகத்தன்மையால் விசேஷணத்தன்மை, தத்சப்தார்த்தத்திற்கு வியாவர்த்தியத் தன்மையால் விசேஷ்யத் தன்மையுமாம்.

அங்ஙனமே அயம் (இவன்), ஸ (அவன்), அவனே நீ என அந்யோந்ய பேத வியாவர்த்தகத் தன்மையால் ஸ அயம்சப்தார்த்தங்கட்குப் பரஸ்பரம் விசேஷண விசேஷ்ய மென்பது பொருளாம்.

ஙனம்? அவ்வாக்கியத்தின்கண்ணே ஸ (அவன்) என்னும் சப்தார்த்த அக்கால விசிஷ்ட தேவதத்தனுக்கும், அயம் (இவன்) என்னும் சப்தார்த்தத்தில் இக்கால விசிஷ்ட தேவ தத்தனுக்கும், அந்யோந்ய பேதத்தை வியாவர்த்தகம் செய்வதால் விசேஷண விசேஷிய பாவமாம்.

அங்ஙனமே, தத்துவமஸி என்னும் வாக்கியத்திலிடத்தும் தத்-(அது) என்னும் பதார்த்தபரோக்ஷத்துவாதி விசிஷ்ட சைதந்யத்திற்கும், த்வம்-(நீ) என்னும் பதார்த்த அபரோக்ஷத்துவாதி விசிஷ்ட சைதந்யத்திற்கும்அந்யோந்ய பேதத்தை வியாவர்த்தகஞ் செய்வதால் விசேஷண விசேஷிய பாவமாம்.

(3) லக்ஷிய லக்ஷண ஸம்பந்தம் எங்ஙனம் ? அவ்வாக்கியத்தின்கண்ணே ஸ (அவன்) என்னும் சப்தத்தின்கண்ணும், அயம் (இவன்) என்னும் சப்தத்தின்கண்ணும், அல்லது அவற்றின் அர்த்தத்தின் கண்ணும் உள்ள விருத்த அக்கால இக்கால விசிஷ்டத்தன்மையைப் பரித்தியாகஞ் செய்து விரோத மின்றிய தேவதத்தனோடு லக்ஷிய லக்ஷண பாவமாம்.

அங்ஙனமே, ஈண்டும் தத் த்வம் பதங்களின்கண்ணும், அல்லது அவற்றின் அர்த்தத்தின்கண்ணும் உள்ள விருத்த பரோக்ஷத்துவாதி விசிஷ்டத்தன்மையைப் பரித்தியாகஞ் செய்து, விரோத மின்றிய சைதந்யத்தோடு லக்ஷிய லக்ஷண பாவமாம்.

இதுவே ஜகதஜகத் லக்ஷணை யென வேறு பரியாயமாம்.

ஓரம்ச பரித்தியாகத்தினால் ஓரம்சக் கிரஹணம் பாவ லக்ஷணை யெனப்படுகின்றது.

**2**—13. ஆத்தியாத்மிகமும், ஆதிபௌதிகமும், ஆதிதைவிகமும் எனத் தாபம் மூன்றும்.

**2**—14. ஆத்தியாத்மியம், ஆதிபூதம், ஆதிதைவதம் என அத்தியாத்மியாதி மூன்றும்.

**2**—15. ஆரம்ப, பரிணம, விவர்த்தங்களெனக் காரணம் மூன்றும்.

(1) எங்ஙனம்,பாலே தயிராதி ஆகாரமாகப் பரிணமிக்கின்றது, அங்ஙனமே பிரகிருதி, பிரதான சப்த வாச்ய மாயையே, ஜக தாகாரமாகப் பரிணமிக்கின்றது என்னும் பிரக்ரியை ஸாங்கியர்களினது மதத்தில் பரிணம வாதமாம்.

(2) எங்ஙனம், அநேக மிருத்திகையின் அணுக்கள் சேர்ந்து கடமாம், எங்ஙனம் அநேக தந்துக்கள் சேர்ந்து படமாம், அங்ஙனமே அநேக அணுக்கள் சேர்ந்து ஜகத்தை உண்டாக்குகின்றன என்பது நையாயிகர்களினது மதத்தில் ஆரம்ப வாதமாம்.

(3) சித்தின் விவர்த்தங்கள் சித்தே என்பது வேதாந்திகளினது மதத்தில் விவர்த்த வாதமாம்.

**2**—16. ஸத்வ, ரஜஸ், தமஸ் எனக் குணம் மூன்றும்.

**2**—17. பூத, பவிஷியத், வர்த்தமானக் காலம் எனக் காலம் மூன்றும்.

**2**—18. பிரஹ்ம, விஷ்ணு, மஹேப்வரர்கள் என மூர்த்தி மூன்றும்.

**2**—19. ஞாதா, ஞாநம், ஞேயம் என ஞாதாதி மூன்றும்.

இதுவே திரிபுடி என்றுகூறப்படுகின்றது. ஞாதாதி மூன்று விசேஷணங்கள் ஒற்றித்திருப்பதற்குத் திரிபுடி யென்பது பொருளாம்.

**2**—20. ஸ்தூலப் பிரபஞ்சம், ஸூக்ஷ்மப் பிரபஞ்சம், காரணப் பிரபஞ்சம் எனப் பிரபஞ்சம் மூன்றும்.

**2**—21. பாதாள, மர்த்திய, ஸ்வர்க்கங்கள் என லோகம் மூன்றும். இதனையே முச் சகத் தெனவும் கூறப்படும்.

**2**—22. ஸம்சயம், அசம்பாவனை, விபரீதபாவனை என ஞாநப் பிரதிபந்தம் மூன்றும்.

**2**—23. லோக வாசனையும், தேக வாசனையும், சாஸ்திர வாசனையும் என வாசனை மூன்றும்.

**2**—24. சிரவண, மநந, நிதித்தியாஸநங்கள் எனச் சிரவணாதி மூன்றும்.

(1) ஸர்வ சம்சயத்தினையும் நிவர்த்திப்பது சிரவணமாம்.

(2) மநத்தின் சம்பாவனையி(சம்சயத்தி)னை நிவர்த்திப்பது மநநமாம்.

(3) விபரீத பாவனையினை நிவர்த்திப்பது நிதித்தியாஸநமாம் என விவேகிக்க.

**2**—25. ஞாநமும், வைராக்கியமும், உபரதியும் என ஞானாதி மூன்றும்.

**2**—26. ஹேது, ஸ்வரூபம், காரியம் என ஹேத்வாதி மூன்றும்.

(1) ஞாநத்திற்கு ஹேது, சிரவணாதி மூன்றும்.

(2) நான் தேஹேந்திரியாதிகட்கு அதிரிக்த ஸாக்ஷி, பிரதீதியாகப்பட்ட பிரபஞ்சம் அசத்தியம்

என்னும் திடநிச்சயம்,ஞானத்தின் ஸ்வரூபமாம். ஈண்டு நிச்சயத்தினது தார்ட்யம் ஸம்சயாதி ரகிதமாம்.

(3) அநாத்மாவின்கண் ஆத்மபுத்தியின் அபாவம், ஞானத்தின் காரியம் என விவேகிக்க.

(1) வைராக்கியத்திற்கு ஹேது, விஷயங்களினிடத்துத் தோஷ திருஷ்டியாம்.

(2) வாந்தாசநம் போன்றுதள்ளத்தக்கதாம்புத்தி, ஸ்வரூபமாம்.

(3) மீண்டும் ஆசையின் அபாவம் காரியமாமெனப் பாவிக்க.

(1) உபரதிக்கு ஹேது, யம, நியமாதிகளாம்.

(2) சித்த நிரோதம் ஸ்வரூபமாம்.

(3) சர்வ வியவகார நாசம் காரியமாம்.

ஹேது ஸ்வரூப காரியங்கள்,ஞானம்,வைராக்கியம், உபரதிகட்கு அறியத்தக்கனவாம்.

(1) வைராக்கியத்திற்கு, அவதி, பிரஹ்ம லோகத்தினைத் திரணமாக அறிதலாம்.

(2) அஞ்ஞான காலத்தில் தேகாதிகளினிடத்து ஆத்மத்தன்மையை விஷயஞ் செய்யும் திட புத்தி போன்று, அதன் பிரதீதி யின்றயதோடு நான் பிரஹ்மம் என்னும் திடநிச்சயம் போதத்திற்கு அவதியாம்.

(3) ஸுஷுப்தி போன்று ஸமஸ்த வஸ்துக்களின் ஸ்மரண மின்மை, உபரதிக்கு அவதியாம் என அறிக.

**2**—27. பிராண நிக்ரஹ உபாயங்களாய ரேசக, பூரக, கும்பகங்கள் எனப் பிராணயாமம் மூன்றும்.

**2**—28. நேத்திர தர்மமாய குருட்டுத் தன்மை யாதி படுத்துவ மின்மையாகிய ஆந்தியாதி மூன்றும்.

**2**—29. ஸஹஜ தாதாத்மியம், கர்மஜந்ய தாதாத்மியம், பிராந்திஜந்ய தாதாத்மியம் என அஹங்காரத்திற்குச் சித்சாயை தேஹ சாக்ஷிகளோடு தாதாத்மியம் மூன்றும்.

(1) அவற்றுள், சித்சாயையோடு அஹங்காரத்திற்குத் தாதாத்மியம் ஸஹஜமாம்.

(2) தேஹத்தோடு அஹங்காரத்திற்குத் தாதாத்மியம் கர்மஜமாம்.

(3) ஸாக்ஷியோடு அஹங்காரத்திற்குத் தாதாத்மியம் பிராந்தி ஜந்யமாம்.

இதன் நிவிர்த்தி, ஸம்பந்தியாய சித்சாயை, அஹங்காரங்கட்கு ஸஹஜமாக நிவிர்த்தி பொருந்தாது. சம்பந்தி நாசமாயின் நிவிர்த்தி யிருக்கின்றது என்பது பொருளாம். எங்ஙனம் சராவ ஜல நிமித்தம் உதயமான சூரியப் பிரதிபிம்பத்திற்குச் சராவ ஜல நிவிர்த்தியால் நிவிர்த்தி போன்று என்பது பொருளாம்.

சரீர அஹங்காராதிகளினது தாதாத்மியம், கர்மக்ஷயத்தால் நிவிர்த்தியாகின்றது.

ஆத்மா அஹங்காராதிகளின் தாதாத்மியம்,ஞானத்தால் நிவிர்த்தியாகின்றது.

பிரஹமாத்ம தத்வ ஸாக்ஷாத்காரத்தால் மூவித தாதாத்மியமும் ஒருங்கே நிவிர்த்தியாகின்றன.

அஞ்ஞானத்தானே நான் என ஆத்ம பரிச்சேதம் ஆகின்றது; ஞானத்தால் அஞ்ஞானம் நிவிர்த்தி யாகுமிட

த்து, அபரிச்சிந்நமாய ஆத்மாவே நான் என்று கூறப்படுகின்றது.

**2**—30. புத்ரேஷணையும், வித்தேஷணையும், லோகேஷணையும் என ஏஷணை மூன்றும்.

**2**—31. சுழுத்தி, மூர்ச்சை, சமாதிகள் எனச் சுழுத்தியாதிகள் மூன்றும்.

**2**—32. பிரஹ்மாநந்தமும், விஷயாநந்தமும், வாசனாநந்தமும் என ஆநந்தம் மூன்றும்.

நிஜாநந்தமும், முக்கியாநந்தமும், ஆத்மாநந்தமும், யோகாநந்தமும், அத்வைதாநந்தமும், பிரஹ்மாநந்தத்தில் அடக்கமாம். வித்தியாநந்தம் விஷயாநந்தத்தில் அடக்கமாம்.

**2**—33. ஆகாமி, சஞ்சித, பிராப்த மெனக்கர்மம் மூன்றும்.

(1) பிராரப்த கர்ம பலத்தைப் புசிப்பவனாயிருந்து மரண பரியந்தம் செய்யப்பட்ட புண்ணிய பாவரூப கர்மம் ஆகாமி யெனப்படும்.

(2) ஜன்மத்திற்கு ஹேதுவாயிருக்கும் பூர்வ ஜந்மத்திற் செய்த கர்மம் சஞ்சித மெனப்படும்.

(3) சரீரத்தை ஆரம்பிக்கும் கர்மம் பிராரப்தமாம்.

**2**—34. ஜாக்கிரத்தில் ஜாக்கிரம், ஜாக்கிரத்தில் ஸ்வப்நம், ஜாக்கிரத்தில் சுழுத்தி என ஜாக்கிரம் மூன்றும்.

**2**—35. ஸ்வப்ந ஜாக்கிரம், ஸ்வப்ந ஸ்வப்நம், ஸ்வப்ந சுழுத்தி யென ஸ்வப்நம் மூன்றும்.

**2**—36. சுழுத்தி ஜாக்கிரம், சுழுத்தி ஸ்வப்நம், சுழுத்தி சுழுத்தி எனச் சுழுத்தி மூன்றும்.

(1) அங்ஙனமன்றே, பிரமா ஞாநம் ஜாக்கிர ஜாக்கிரமாம். சுத்தி, ராஜதாதிப் பிராந்தி ஜாக்கிர ஸ்வப்நமாம். சிரமாதிகளால் ஸ்தம்பித்துப் போதல் ஜாக்கிர சுழுத்தியாம்.

(2) இங்ஙனமே, ஸ்வப்நத்தில் மந்திராதிப் பிராப்தி ஸ்வப்ந ஜாக்கிரமாம்; ஸ்வப்நத்திலும், ஸ்வப்நம் என்னால் பார்க்கப்பட்டது என்னும் புத்தி ஸ்வப்ந ஸ்வப்நமாம். ஜாக்கிரதசையின்கண் கூறுதற்கு ஸமர்த்தின்றி, ஸ்வப்ந அவஸ்தையின்கண் சிற்சில அநுபவிக்கப் படுவது ஸ்வப்ந சுழுத்தியாம்.

(3) இங்ஙனமே, சுழுத்தி யவஸ்தையின்கண்ணும் ஸாத்வீகமான ஸுகாகார விர்த்தி சுழுத்தி ஜாக்கிரமாம். அதன் பின்னர் நான் சுகமாகத் தூங்கினேன் எனப்பராமர்சம் உண்டாகின்றது. ஆண்டே ரஜோகுண ஸம்பந்த விர்த்தி சுழுத்தி ஸ்வப்நமாம். அதன்பின்னர்த் துக்கத்தோடு தூங்கினேன் எனப் பராமர்சம் உண்டாகின்றது. ஆண்டே தமோகுண சம்பந்த விர்த்தி சுழுத்தி சுழுத்தியாம். அதன் பின்னர் மிகுந்த கன அசேதநமாக நான் இருந்தேன் எனப் பராமர்சம் உண்டாகின்றது.

௩—37. ஞாநாத்மாவும், மஹாத்மாவும், சாந்தாத்மாவும் என ஆத்மா மூன்றும்.

**௩**—38. க்ஷய தாபம், அதிசய தாபம், ஸாஹஸ பதந தாபம் என ஸ்வர்க்க லோக தாபம் மூன்றும்.

(1) எங்ஙனம் தன்னாற் சம்பாதிக்கப்பட்ட தன நாசத்தால் மநோவிசாரரூப தாபம் உண்டாகின்றது. அங்ஙனமே புண்ய கர்ம நாசத்தில் மீண்டும் விழ

வேண்டும் என்னும் பீதியால் ஜனித்த தாபமே க்ஷய தாபமாம்.

(2) ஸ்வர்க்க லோகம் செல்லும் ஸமயத்தில் தன்னினும் அதிகமான தேவதைகளால் ஸ்தாபிக்கப்பட்ட லோகத்தைப் பார்ப்பதே அதிசய தாபமாம்.

(3) புண்ய கர்ம க்ஷயத்தின் பின் ஆண்டுள்ள தேவதைகளால் தண்டத்தால் அடித்தலால் ஸர்வாங்கங்களும் நடுங்கிக்கொண்டு விழுதல் ஸ்வர்க்க லோக ஸாஹஸ பதந தாபமாம் என அறிக.

**2**—39. நாத, பிந்து, கலை, என நாதாதி மூன்றும்.

(1) கழுத்தின்கண் ணுள்ள துவாரத்தில் கண்ட உச்சாரணஞ் செய்வது நாதமாம்.

(2) அநுஸ்வாரம் பிந்துவாம்.

(3) நாத ஏகதேசத்திலிருப்பது கலையாம்.

**3**—1. விஷயாசக்தியும், பிரக்ஞா மாந்தியமும், குதர்க்கமும், விபர்யய துராக்ரஹமும் என ஞானத்தின்கண் வர்த்தமானப் பிரதிபந்தகம் நான்காம்.

(1) விஷயத்திகண் ஆரூடசக்தி விஷயாசக்தியாம்.

(2) அறிவிக்கப்பட்ட அர்த்தத்தினைப் புத்தியால் கிரகணஞ் செய்யப்படாமை பிரக்ஞா மாந்தியமாம்.

(3) பிரதிபாதிக்கப்பட்டஅர்த்தத்தினது விபரீதக் கிரகணம் குதர்க்கமாம்.

(4) நான் சுரோத்திரியன், நான் பண்டிதன், நான் விரக்தன் என தேஹேந்திரியாதிகளில் ஆத்மபுத்தி விபர்யய துராக்கிரஹமாம்.

ஸமாதி ஆரூடனும், விஷயாசக்தி நிவிர்த்தியாகின்றது. சிரவணத்தால் பிரக்ஞா மாந்தியம் நிவிர்த்தியாகின்றது. மநநத்தால் குதர்க்கம் நிவிர்த்தியாகின்றது. நிதித்தியாஸநத்தால் விபர்யய துராக்கிரஹம் நிவிர்த்தியாகின்றதென விவேகிக்க.

**3**—2. தர்மார்த்த, காம, மோக்ஷங்கள் எனப் புருஷார்த்தம் நான்காம்.

**3**—3. ஜாதி, குணம், கிரியை, சம்பந்தங்கள் எனச் சப்தப் பிரவிர்த்தி நிமித்தம் நான்காம்.

சப்தப் பிரவிர்த்திக்கு நிமித்தமாய அவை பிரஹ்மத்தின்கண் ணின்மையின், அதன்கண் சப்தப் பிரவிர்த்தி யின்றென அறிக.

**3**—4. பிரஹ்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரர் என வர்ணம் நான்காம்.

**3**—5. பிரஹ்மசர்யாஸ்ரமமும், கிருஹஸ்தாஸ்ரமமும், வாநப்பிரஸ்தாஸ்ரமமும், யதி ஆஸ்ரமமும் என ஆஸ்ரமம் நான்காம்.

**3**—6. நித்தியாநித்திய வஸ்து விவேகமும், இஹாமுத்தரார்த்த பலபோக விராகமும், சமாதி ஷட்க சம்பத்தியும், முமுக்ஷுத்துவமும் என ஸாதநம் நான்காம்.

**3**—7. மநம், புத்தி, அஹங்காரம், சித்தம் என அந்தக்கரணம் நான்காம்.

**3**—8. விஷயம், பிரயோஜநம், சம்பந்தம், அதிகாரி யென அநுபந்தம் நான்காம்.

அஃதெங்ஙனம்? (1) ஸாதன சதுஷ்டய ஸம்பந்நப் பிரமாதா அதிகாரியாம்.

(2) விஷயம் ஜீவப் பிரஹ்ம ஐக்கியமாம். சுத்த சைதந்யம் பிரமேயம்; ஆண்டே வேதாந்தங்கட்கு தாத்பர்ய முண்மையின்.

(3) ஸம்பந்தமோ அதனோடு ஐக்கியப் பிரமேயத்திற்கும், அதனைப் பிரதிபாதிக்கும் உபநிஷத் பிரமாணத்திற்கும், போத்திய போதக பாவ லக்ஷண ஸம்பந்தமாம்.

(4) அதனோடு ஐக்கியப் பிரமேயத்தின்கண்ணுள்ள அஞ்ஞாந நிவர்த்தியும் ஸ்வரூபாநந்தப் பிராப்தியும் பிரயோஜநமாம்.

**3**—9. சங்கற்பம், நிச்சயம், அபிமாநம், அநுஸந்தாநம் எனச் சங்கற்பாதி நான்காம்.

(1) சங்கற்ப விர்த்தி ரூபத்தாற் பரிணமிக்கும் அந்தக்கரண மநம், அல்லது மநரூப மநம், அல்லது சங்கற்ப விர்த்திக்கு ஹேதுவாய மநம் சங்கற்பமாம்.

(2) நிச்சய விர்த்தி ரூபத்தாற் பரிணமிக்கும் அந்தக்கரண புத்தி, அல்லது நிச்சயரூப புத்தி, அல்லது நிச்சயத்திற்கு ஹேதுவாயபுத்தி நிச்சய மெனப்படும்.

(3) அபிமாந விர்த்தி ரூபத்தாற் பரிணமிக்கும் அந்தக்கரண அஹங்காரம், அல்லது அபிமாந ரூப அஹங்காரம், அல்லது அபிமாநத்திற்கு ஹேதுவான அஹங்காரம் அபிமாநமாம்.

(4) பூர்வோத்தர அநுஸந்தாந ரூப விர்த்தியுடைய அந்தக்கரண சித்தம், அல்லது அநுஸந்தாந ரூப சித்தம், அல்லது அநுஸந்தாநம் செய்யும் சித்தம் அநுஸந்தாநமாம்.

3—10. இருக்கு, யஜுர், சாம, அதர்வண வேத மென வேதம் நான்காம்.

3—11. பிரத்தியக்ஷ, அநுமாந, உபமாந, சப்தம் எனப் பிரமாணம் நான்காம்.

3—12. லயம், விக்ஷேபம், கஷாயம், ரஸாஸ்வாதம் என ஸமாதி விக்நம் நான்காம்.

(1) அகண்ட வஸ்துவின் அவலம்ப மின்மையால் சித்த விருத்தியின் நித்திரை லயமாம்.

(2) அகண்ட வஸ்துவின் அவலம்ப அபாவத்தால் சித்த விருத்தியின் வேறு அவலம்பநம் விக்ஷேபமாம்.

(3) லய விக்ஷேப மின்றி யிருப்பினும் சித்த விருத்தி ராகாதி வாசனையால் ஸ்தம்பம்போன்றாய் விடுதலின், அகண்ட வஸ்துவின் அவலம்பந மின்மை கஷாயமாம்.

(4) அகண்ட வஸ்துவின் அவலம்பந மின்றி யிருப்பினும் சித்த விருத்தி, ஸவிகற்ப ஆநந்தத்தை அநுபவித்தல், அல்லது சமாதியின் ஆரம்ப சமயத்தில் ஸவிகற்ப ஆநந்தத்தை யநுபவித்தல் ரஸாஸ்வாதமாம்.

3—13. மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என மைத்திரியாதி நான்காம்.

3—14 ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் எனப் பூதக்கிராமம் (கூட்டம்) நான்காம்.

3—15. பிரஹ்மவித், வரன், வரியான், வரிஷ்டன் என பிரஹ்மவித்தாதி நான்காம்.

3—16. குடீசகம், பஹூதகம், ஹம்ஸம், பரமஹம்ஸம் என ஸந்யாஸம் நான்காம்.

**3**—17. அநந்தரம் பூமிகையின் வர்ணனமாம். தத்வ வித்தாயினும், கிலேச நிவிர்த்தியின் பொருட்டு இங்ஙனம் அஸம்பிரக்ஞாத ஸமாதியின் அபேக்ஷை அவனுக்கு இருக்கின்றது.

(1) அஸம்பிரக்ஞாத ஸமாதியின் பசு அஸ்வாதி போன்று வாக்கு நிரோதம் முதற் பூமியாம்.

(2) பாலன் ஊமை முதலியோர் போன்று மநந மில்லாத் தன்மை இரண்டாவதாம்.

(3) மூர்ச்சை போன்று அஹங்கார மின்மை மூன்றாவதாம்.

(4) சுழுத்தி போன்று மஹத்துத் தன்மை இன்மை நான்காம் பூமியாம் எனப் பூமி நான்காம்.

இப்பூமி நான்கையும் அபிப்பிராயம் செய்து மெள்ள மெள்ள உபராமத்தை அடைக எனப் பகவானாற் கூறப்பட் டிருக்கின்றது.

**3**—18. அத்தியாத்ம வித்தையின் பிராப்தி, ஸாது சங்கம், வாசனையின் பரித்தியாகம், பிராண ஸ்பந்த நிரோதம் என யுக்தி நான்காம்.

சித்த க்ஷயத்தின்கண் ஒரு யுக்தியே ஸாதநமாம். இதனால் முன்னதன்கண் திடத்தன்மை யில்லாக்கால் உத்தர ஸாதநத்திற் பிரவர்த்திக்க என எறிக.

**3**—19. சீத, உஷ்ண, மிருது, கடின பேதத்தால் ஸ்பரிசம் நான்கு வகைத்தாம்.

**4**—1. அந்நமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞாநமயம், ஆநந்தமயம் எனக் கோசங்கள் ஐந்தாம்.

**4**—2. சுரோத்திரம், த்வக், சக்ஷு, ஜிஹ்வை, கிராணம் என ஞாநேந்திரியம் ஐந்தாம்.

**4**—3. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் எனச் சப்தாதி ஐந்தாம்.

**4**—4. வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் எனக் கர்மேந்திரியம் ஐந்தாம்.

**4**—5. வசனித்தல், ஏற்றல், செல்லல், விடல், ஆநந்தித்தல் என வசநாதி ஐந்தாம்.

**4**—6. பிராணன், அபாநன், வியாநன், உதாநன், ஸமாநன் எனப் பிராணாதி ஐந்தாம்.

**4**—7. நாகன், கூர்மன், க்ருகலன், தேவதத்தன், தநஞ்சயன் என உபவாயுக்கள் ஐந்தாம்.

**4**—8. நித்தியம், நைமித்திகம், பிராயச்சித்தம், காம்யம், நிஷித்தம் எனக் கர்மம் ஐந்தாம்.

நித்திய கர்மம் செய்யாத விடத்துப் பிரத்தியவாய ஸாதநங்கள் ஸந்தியாவந்தனாதிகளாம். நைமித்திகம் புத்ரோத்பத்தியாதியை நியமிக்கும் ஜாதேஷ்டியாதிகளாம்; பிராயச்சித்தம் பாப நாச ஸாதந கிருச்ர ஸாந்தராயணாதிகளாம்; ஸ்வர்க்காதி இஷ்ட ஸாதநமாய ஜோதிஷ்டோமாதிகள் காம்யங்களாம்; நரகாதி அநிஷ்ட ஸாதந பிரஹ்மஹத்தியாதிகள் நிஷித்தங்களாம் என விவேகிக்க.

**4**—9. சப்த தன்மாத்திரை, ஸ்பரிச தன்மாத்திரை, ரூப தன்மாத்திரை, ரஸ தன்மாத்திரை, கந்த தன்மாத்திரை என ஸூக்ஷ்ம பூதங்கள் ஐந்தாம்.

**4**—10. பஞ்சீகிருத பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என ஸ்தூல பூதங்கள் ஐந்தாம்.

**4**—11. அஹிம்ஸை, சத்தியம், அஸ்தேயம், பிரஹ்மசர்யம், அபரிக்கிரஹம் என யமம் ஐந்தாம்.

4—12. சௌசம், ஸந்தோஷம், தபம், ஸ்வாத்தியாயம் ஈச்வரப் ப்ரணிதாநம் என நியமம் ஐந்தாம்.

4—13. க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்ரம், நிருத்தம் எனப் பூமிகை ஐந்தாம்.

(1) லோக வாஸனை சாஸ்திர வாஸனை தேஹ வாஸனைகளிலிருக்கும் சித்தம், க்ஷிப்த பூமிகையாம்.

(2) நித்திரை, ஆலஸ்யாதிகளால் கவரப்பட்ட சித்தம் மூட பூமிகையாம்.

(3) ஒருகாலத்து ஞாநத்தோடு கூடிய சித்தம் க்ஷிப்தத்தினின்றும் கிஞ்சித் விசேஷத்தையுடையது விக்ஷிப்த பூமிகையாம். அவற்றுள், க்ஷிப்த மூடங்கட்கு ஸமாதித் தன்மைச் சங்கையே யின்றாம். விக்ஷிப்தத்தின்கண்ணே ஸமாதித் தன்மைச் சங்கை யிருக்கின்றது. அந்நிய இருபூமியின்கண் ஸமாதியாம்.

(4) ஏகாக்ர மநதின்கண் சத்ரூப அர்த்தம் தோற்றுகின்றது. கிலேசங்கள் நாசத்தை யடைகின்றன. கர்ம பந்தங்கள் கெடுகின்றன. நிரோதம் அபிமுகமாகின்றது. ஆதலால் ஸம்ப்ரஞ்ஞாத யோகம் ஏகாக்ர பூமிகையாம்.

(5) சர்வ விர்த்தி நிரோதரூப அசம்பிரஞ்ஞாத சமாதி நிருத்த பூமிகையாம்.

4—14. நித்தியப் பிரளயமும் அவாந்தரப் பிரளயமும், நைமித்திகப் பிரளயமும், ப்ரஹ்மப் பிரளயமும், ஆத்தியந்திகப் பிரளயமும் எனப் பிரளயம் ஐந்தாம்.

(1) பிராணிகளினது சுழுத்தி நித்தியப் பிரளயமாம்.

(2) ஆயிரம் சதுர்யுகம் பிரஹ்மாவின் திநமெனப் படுகின்றமையின் ப்ரஹ்மாவின் ஒரு தினத்தில் பதினான்கு மநுக்களினுடைய ஆதிபத்தியமும், பதினான்கு இந்திரர்களுடைய ஆதிபத்தியமும், ஒருவர்க்கு நீங்கிவிடில், அந்யர்க்குப் பிராப்தமாங்கால் ஆதிபத்திய அநுகூல பரியந்தம் உண்டாகின்றது. அச்சமயத்தில் பதினான்கு அவாந்தரப் பிரளயங்கள் என்று கூறப்படுகின்றன. அவற்றிற்கு நைமித்திகப் பிரளய மென்றும், மன்வந்தரப் பிரளய மென்றும் பெயராம். இவற்றின்கண் யுகப் பிரளயங்களும் அந்தர்ப் பாவமாம்.

(3) பிரஹ்மாவின் ஸுஷுப்தி தைநந்திந(அன்று அன்றை)ப் பிரளயமாம்.

(4) பிரஹ்மாவின் நாசாவஸ்தை பிரஹ்மப் பிரளயமாம். அப்பொழுது ஆகாசாதிப் பிரபஞ்ச மின்றிச் சத்ரூப ஞாந மாத்திர மிருக்கின்றது. ப்ரஹ்மப் பிரளயத்திற்கு மஹாப்பிரளய மென்றும், பிராகிருதப் பிரளய மென்றும், ஸுஷுப்தி யென்றும் பெயராம்.

(5) முக்தாவஸ்தை ஆத்தியந்திகப் பிரளயமாம்; அச்சமயத்தில் அஞ்ஞாநம் ஸர்வப் பிரகாரத்து மின்று. இவ்வாறு பிரளயம் ஐந்தாம்.

**4**—15. பரமேச்வரனி னின்றும் ஜீவாத்மா பிந்நம், ஆத்மாவினிடத்துப் பிரதீதியாகும் கர்த்திருத்வாதிகள் ஸத்யம், சரீரத்திரயாவச்சிந்ந ஆத்மா சங்கி, ஜகத்காரணத் தன்மையால் பிரஹ்மத்திற்கு விகாரித் தன்மை, காரணத்தி னின்றும் பிந்நமாய பிரபஞ்சத்திற்கு ஸத்தியத் தன்மை எனப் பிராந்திகள் ஐந்தாம்.

**4**—16. (1) பிம்பப் பிரதிபிம்ப திருஷ்டாந்தத்தால் பேதப் பிராந்தியினை நிவர்த்திக்க.

(2) ஸ்படிக, லோஹித திருஷ்டாந்தத்தால் பாரமார்த்திக கர்த்ருத்வப் பிராந்தியை நிவர்த்திக்க.

(3) சூரிய அக்நியை யுண்டாக்கும் கண்ணாடி திருஷ்டாந்தத்தால் விகாரத்தன்மைப் பிராந்தியை நிவர்திக்க.

(4) கடாகாச திருஷ்டாந்தத்தால் சங்கி என்னும் பிராந்தியை நிவர்த்திக்க.

(5) ஸ்வர்ண கடக, இருப்புக் கட்காதி திருஷ்டாந்தத்தால் காரணத்தினின்றும் பிந்நமாகப் பிரதீதியாகப் பட்ட பிரபஞ்சத்தின் ஸத்தியத் தன்மைப் பிராந்தியை நிவர்த்திக்க எனப் பிராந்தி ஐந்தினையும் நிவிர்த்கிக்கும் திருஷ்டாந்தம் ஐந்தாம்.

**4**—17. பிரஹ்மத்தில் ஜகத்து, பிராந்தியாற் பிரதீதியாகின்ற தென்பதன்கண் சுத்தியில் ரஜதமும், இரஜ்ஜுவின்கண் சர்ப்பமும், ஸ்தாணுவின்கண் புருஷனும், ஆகாயத்தின்கண் நீலத்தன்மை முதலியனவும், ஊஷர பூமியில் ஜலமும் என்பனவாய திருஷ்டாந்தங்கள் ஐந்தாம்.

**4**—18. ஆத்மக் கியாதியும், அஸத் கியாதியும், அக்கியாதியும், அந்யதாக் கியாதியும், அநிர்வசநீயக் கியாதியும் எனக் கியாதி ஐந்தாம்.

(1) ஸாங்கிய, பிரபாகரர்கட்கு அக்கியாதி மதம் அங்கீகாரமாம்.

(2) பாட்ட வைசேஷிகர்கட்கு அந்யதாக் கியாதி மதம் அங்கீகாரமாம்.

(3) விஞ்ஞாந வாதிகட்கு ஆத்மக் கியாதி மதம் அங்கீகாரமாம்.

(4) சூந்ய வாதிகட்கு அஸத் கியாதி மதம் அங்கீ காரமாம்.

(5) வேதாந்த வாதிகட்கு அநிர்வசநீயக் கியாதி மதம் அங்கீகாரமாம்.

**4**—19. அவித்தை, அஸ்மிதை, அஸூயை, ஸ்பர்த்தா, அபிநிவேசம் எனக் கிலேசம் ஐந்தாம்.

(1) மலமூத்திராதிகளால் போர்த்தப்பட்ட 'ஸ்தூல சரீரமே நான்' என்னும் அபிமாநம் அவித்தையாம்.

(2) தாபத் திரயத்தால் துக்காநுபவமே அஸ்மிதையாம்.

(3) இராகாதிகளால் திரஸ்கார அநுபவம் அஸூயையாம்.

(4) ஸத்புருஷர்களின் தரிசனத்தின்கண் துவேஷ புத்தியால் நிஷேதிப்பது ஸ்பர்த்தமாம்.

(5) ஜனங்களை ஸந்தோஷப்படுத்தும் பொருட்டு அதற்கு உசிதமான கர்ம யத்ந துவேஷாதிகளைத் தரித்தல் அபிநிவேசம் எனப் பாவிக்க.

**5**—1. ஏக ரஸ வஸ்து மாத்திரமாகச் சித்தத்தின் அவ்வாகார விருத்தி விசேஷ அவஸ்தை, ஸம்ப்ரஞ்ஞாத ஸமாதியாம். அது ஸவிகற்ப மென்றுங் கூறப்படுகின்றது.

அது மீண்டும் திருசியாநுவித்தமும், சப்தாநுவித்தமும் என இருவகைத்தாம். திருசியத்தோடு மிஶ்ரமாயது திருசியாநுவித்தமாம். சப்தத்தோடு மிஶ்ரமாயது சப்தாநுவித்தமா மென விவேகிக்க.

விருத்தியினையும் அகண்டைகரஸ மாத்திரமாக உபஸம்ஹாரஞ் செய்து விருத்தியுடைய சித்தத்தின்

பிரளய பூர்வகம் வஸ்து மாத்ரமாக விருத்தல் அஸம்ப்ரஞ்ஞாத ஸமாதியாம். அதுவே நிர்விகற்ப மென்றுங் கூறப்படுகின்றது.

திருசியாநுவித்த, சப்தாநுவித்த, நிர்விகற்பக ஸமாதிகளே பாஹ்யாந்தர பேதத்தால் ஷட் ஸமாதி யென வியவகரிக்கப்படுகின்றது.

(1) ஸத்வ, ரஜஸ், தமோகுண ரூபம், சாந்தி கோர மூட விர்த்திகளாம். அவற்றுள், சாந்தி சுகத்தையும், ஔதார்யத்தையும், வைராக்யத்தையும் கொடுக்கும். கோரமோ காம, லோப, குரோத, திருஷ்ணைகளைக் கொடுக்கும். மூடம் மோக, பிராந்தியைக் கொடுக்கும். இந்த விர்த்திகள் ஹிருதயத்தின்கண் வெளிப்பட்டுப் பார்க்கப்படின், அவற்றின் திருஷ்டா, ஸாக்ஷி, அநுஸ்யூதன் நான் என உண்டாவது திருசியாநுவித்த ஆந்தரீய ஸவிகற்பக ஸமாதியாம்.

(2) விருத்திகள் முக்குணரூப மாகலின், நான் அஸங்கன் என உண்டாவது சப்தாநுவித்த ஆந்தரீய ஸவிகற்பக ஸமாதியாம்.

(3) ஹிருதயத்தின்கண் இவ்விரண்டு விகற்பமும் தோற்றாதிருத்தல் அஸம்பிரஞ்ஞாத சமாதியாம். அதுவே நிர்விகற்பக மென்றுங் கூறப்படுகின்றது.

(4) அல்லது, அஸூயை முதலியவற்றின் திருஷ்டா, ஸாக்ஷி, அநுஸ்யூதன் நான் என உண்டாவது திருசியாநுவித்த ஸவிகற்பக ஸமாதியாம்.

(5) ஸூர்யாதிகளினின்றும் அஸங்கன் நான் என உண்டாவது சப்தாநுவித்தமாம்.

(6) இவ்விரண்டு விகற்பமும் தோற்றாதிருத்தல் நிர்விகற்பக ஸமாதியாம்.

**5**—2. காம, குரோத, லோப, மோக, மத, மாத்ஸர்யங்கள் அரி ஷட் வர்க்கங்களாம்.

**5**—3. இருத்தல், பிறத்தல், விருத்தி யடைதல், பரிணமித்தல், குறைதல், நசித்தல் என்பன ஷட்பாவ விகாரங்களாம்.

**5**—4. த்வக், மாம்ஸம், உதிரம், மேதை,மச்சை, அஸ்தி எனக் கௌசிகங்கள் ஆறும்.

**5**—5. ஜரை, மரணம்,பசி, தாகம், சோகம், மோகம் என ஊர்மிகள் ஆறும்.

**5**—6. உபக்ரம உபஸம்ஹாரமும், அப்யாஸமும், அபூர்வதையும், பலமும், அர்த்தவாதமும் என தாத்பர்ய நிர்ணயத்தில் லிங்கம் அறுவகைத்தாம்.

(1) அத்விதீய ஆத்மாவைப் பிரதிபாதித்தலால் சிருஷ்டிக்குப்பூர்வம் நாமரூப மின்றி ஸந்மாத்திரமான பிரஹ்மமாக இச்சர்வ ஜகத்தும் இருந்தது எனச் சாந்தோக்கியத்தின் ஆறுவது பிரபாடகப் பிரகரணத்தில் "ஏ ஸௌம்ய! சிருஷ்டிக்குப் பூர்வம் இவ்வெல்லாம் ஸந்மாத்திரமாக இருந்தன" என்னும் சுருதியால் பிரதிபாதிக்கப்படுவது உபக்ரமமாம்.

பிரதிபாதிக்கப்பட்ட இச்சர்வ ஜகத்தும் முற்கூறிய சத்ரூபமே, அந்ய மின்று "இவ்வெல்லாம் இவ்வாத்மாவினதே" எனச் சுருதியின் முடிவில் பிரதிபாதிப்பது உபஸம்ஹாரமாம்.

(2) பிரகரணத்தில் பிரதிபாதிக்கப்படுவதன் மத்தியில் தத் த்வமஸி என ஒன்பதுமுறை உபதேசத்தால் பிரதிபாதிக்கப்படுவது அப்யாஸமாம்.

(3) பிரமாணங்களின் மத்தியில் லக்ஷணையால் "அந்த ஔபநிஷத் புருஷனைக் கேட்கின்றேன்" என்

னும் உபநிஷத் பிரமாணத்தால் அறியத்தக்கது ஆத்மா, இதரப் பிரமாணத்தா னன்று என்னும் விவேகம் அபூர்வதையாம்.

(4) பிராரப்த க்ஷய பரியந்தம் தேஹேந்திரியாதியி னிடத்து மித்யாப் பிரதீதி, பிராரப்தம் சேஷ மின்றி அடையுங் காலத்து அதன் அப்பிரதீதி பூர்வகம் அத்வி தீய ஆத்ம ஸ்வரூபத்தால் இருக்கும் புருஷனான தேவ தத்தனுக்கு "எதுவரை விடுபட வில்லை அதுவே நீணா ளாம். அநந்தரம் ஸம்பத்தை யடைகின்றான்" என் னும் சுருதியால் பிரதிபாதிக்கப்படுவது பலமாம்.

(5) பிரகரணத்தால் பிரதிபாதிக்கப்படும் "உத் தம வுபதேசத்தைக் கேட்டல், உம்மை யங்கீகரித்தல் அங்கீகரித்தல், அறிந்தேன் அறிந்தேன்" என்னும் சுருதியால் ஸ்துதிக்கப்படுவது அர்த்தவாதமாம்.

(6) எங்ஙனம் மண்ணினின்றும் உண்டாய கட சராவாதிகள் மண்ணோ டபிந்நமும்,ஸ்வர்ணத்தினின்று முண்டாய கடக முகுடாதிகள் ஸ்வர்ணத்தோடு அபிந் நமுமாம், அங்ஙனமே காரணத்தினின்றும் ஜநித்த ஜகத்திற்குக் காரணத்தோடு அபிந்நமாம் என்று "விகாரமாய நாமதேயம் வாக்கு மாத்திரமாம்; மண்ணே ஸத்தியமாம்" என்னும் சுருதியால். பிரதி பாதிக்கப்படும் யுக்தி உபபத்தியாம்.

**5—7**. சிசுத்தன்மை, பால்யம், யௌவநம், கௌ மாரம், தாருண்யம், வார்த்தைக்கியம் என அவஸ்தை ஆறாம்.

**5—8**. பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை, சப்தம், தர்க்கம், ஸாங்கியம், யோகம் எனச் சாஸ்திரம் ஆறாம்.

**5**—9. ஆஶ்வலாயந, ஆபஸ்தம்ப, பௌதாயந, காத்தியாயந, ஸத்தியாஷாடி, வைகாநஸம் எனச் சூத்திரம் ஆறும்.

**5**—10. சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருத்தம், ஜோதிஷம், சந்தஸ் என அங்கம் ஆறும்.

**5**—11. ஸ்நாநம், ஸந்தியாவந்தநம், ஜபம், ஹோமம், தேவதார்ச்சனை அதிதி பூஜை, வைஶ்வதேவம் எனக் கர்மம் ஆறும்.

**5**—12. சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ஸமாதாநம், சிரத்தை எனச் சம முதலியன ஆறும்.

**5**—13. "அஜிஹ்வன், ஷண்டகன், பங்கு, அந்தன், பதிரன், முக்தன் என்னும் இவ்வாறு குணங்களால் பிக்ஷு மோக்ஷத்தினை யடைகின்றான். ஸம்ஶயமின்று" என அஜிஹ்வாதி ஆறும்.

(i) "இது இஷ்டம், இது இஷ்ட மன்று என எவன் புஜித்தும் ஆசக்தி அடையாது, ஹிதமும் ஸத்தியமும் அற்ப வசநமு முடையவனோ, அவன் அஜிஹ்வன் (நாக்கின்றியவன்) எனப்படுவன்".

(2) "இன்று பிறந்த பெண் குழந்தையைப்போல் பதினாறுவயதுடைய ஸ்திரீயையும், நூறுவயதுடைய ஸ்திரீயையும் பார்த்து, எவன் விகாரத்தை யடையவில்லையோ, அவன் ஷண்டகன் (நபும்ஸகன்) எனப்படுவன்".

(3) "பிக்ஷையின் பொருட்டும், அல்லது மல மூத்திர நிவிர்த்தியின்பொருட்டும் செல்பவனையும், யோஜனை (எட்டுமைல்) தூரத்திற்கு மேல் செல்லாதவனையும் இருப்பவன் எவன் அவன் எவ்விதத்திலும் பங்கு (நொண்டி) எனப்படுவன்".

(4) "சென்றும், இருந்தும் எவனது நேத்ரம் தூரத்திற் செல்லாதிருக்கிறதோ, நான்கு திக்கிலும் பூமியிற் சென்றும் ஸந்நியாஸியாய அவன் அந்த (குருட)னெனப்படுவன்".

(5) "ஹிதம், அஹிதம், மநத்திற்குப் பிரியம், சோகம், இவற்றைக் கொடுக்கும் வசநங்களைக் கேட்டும் எவன் கேட்க வில்லையோ, அவன் பதிரன் (செவிடன்) எனப்படுவன்".

(6) "விஷயங்கள் எதிர்ப்பட்டும், இந்திரியங்களிற் சாமர்த்தியம் இருந்தும் தூங்குபவன் போல் எவன் இருக்கின்றானோ அவன் முக்தன் எனப்படுவன்".

**5**—14. "குலம், தநம், ரூபம், யௌவநம், ராஜ்யம், தபம் எனப் புறமதம் ஆறும்".

**5**—15. குலம், கோத்ரம், ஜாதி, வர்ணம், ஆஶ்ரமம், நாமம் என்னும் பேதத்தால் பிராந்தி ஆறும்.

(1) கர்நாடக, திராவிட பேத அபிமாந வியவஹாரம் குலப் பிராந்தியாம்.

(2) விஶ்வாமித்ராதி வியவஹாரம் கோத்திரப் பிராந்தியாம்.

(3) பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர பேத அபிமாந வியவஹாரம் ஜாதிப் பிராந்தியாம்.

(4) பதினெண் வருணங்களில் நான் சிரேஷ்டன் என்னும் அபிமாந வியவஹாரம் வர்ணப் பிராந்தியாம்; ஏனையவற்றிற்குப் பொருள் வெளிப்படையாம்.

5—16. வெண்மை, மஞ்சள், பச்சை, சிவப்பு, கருப்பு, புகைமை என்னும் பேதத்தால் ரூபம் அறுவகைத்தாம்.

**5—17.** மதுரம், புளிப்பு, உறைப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு என்னும் பேதத்தால் ரஸம் ஆறு வகைத்தாம்.

**5—18.** "ஸம்பூர்ண ஐஸ்வர்யம், வீர்யம், யசஸ், லக்ஷ்மி, ஞானவைராக்யம் என்னும் இவை ஆறும் பகம் எனப்படும்". ஆதலால் இவை ஐஸ்வர்யாதி ஆறும்.

**5—19.** "பிராணிகளின் உற்பத்தி, மரணம், வருதல், போதல், வித்தை, அவித்தை, இவற்றினை அறிபவன் பகவானவன்" ஆதலால் இவை உற்பத்தியாதி ஆறும்.

முற்புகன்ற பிரமாணம் நான்கும் அநுபலப்தி, அர்த்தாபத்தியுஞ் சேர்ந்து பிரமாணம் ஆறும்.

**6—1.** அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், அநர்த்த நிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி என அவஸ்தை ஏழாம்.

ஆவரணம் இருவகைத்து; கூடஸ்த ரில்லை என்பது அபானாவரணமாம். அதனால் விளங்காமையால் கூடஸ்தரின்று என்பது அஸத்தாவரணமாம். பரோக்ஷ ஞானத்தால் அஸத்தாவரணம் நிவிர்த்தியாம். அபரோக்ஷ ஞானத்தால் அபானாவரணம் நிவிர்த்தியாம். அதனால் விக்ஷேப நிவிர்த்தி, அதனால் அநர்த்த நிவிர்த்தியும், ஆநந்தப் பிராப்தியு முண்டாகின்றதெனப் பகுத்தறிக.

**6—2.** "சுத்த சைதந்யம், ஈஶ்வர சைதந்யம், ஜீவ சைதந்யம், பிரமாதா சைதந்யம், பிரமாண சைதந்யம், பிரமேய சைதந்யம், பல சைதந்யம்" என ஏழு வகைத்தாக, வியவகாரத்தால் கூறிய சைதந்யம் பேதத்தை அடைகின்றமையின், சைதந்யம் எழுவகைத்தாம்.

(1) மாயா உபாதி யின்றிய சைதந்யம் சுத்த மெனப்படும்.

(2) மாயா ஸம்பந்தத்தால் ஈஶ னெனப்படும்.

(3) அவித்தியா வசத்தால் ஜீவ னெனப்படும்.

(4) அந்தக்கரண ஸம்பந்தத்தால் பிரமாதா வெனப்படும்.

(5) அந்தக்கரண விர்த்தி ஸம்பந்தத்தால் பிரமாண மெனப்படும்.

(6) அறியப்படாத சைதந்யம் பிரமேய மெனப்படும்.

(7) அறிந்த சைதந்யம் பல மெனப்படும்.

**௭**—3. பூ, புவ, ஸ்வ, மஹ, ஜந, தப, ஸத்யம் எனப் பூராதி ஏழாம்.

**௭**—4. அதல, விதல, ஸுதல, தலாதல, ரஸாதல, மஹாதல, பாதாளம் என அதலாதி ஏழாம்.

**௭**—5. "ஞாநபூமி, முதல் சுபேச்சை, இரண்டாவது விசாரணை, மூன்றுவது தநுமானஸை, நான்காவது ஸத்வாபத்தி, ஐந்தாவது அசம்சத்தி, ஆறுவது பதார்த்தாபாவநி, ஏழாவது துரீயகாமி" எனப் பூமிகை ஏழாம்.

பூமிகை என்பது சித்தத்தின் அவஸ்தா விசேஷமாம்.

ஈண்டு மூன்று பூமிகை பிரஹ்மவித்தையின் ஸாதநமேயாம்; பிரஹ்மவித்தையில் அந்தர்ப்பாவ மன்றும்; பேதத்தின் ஸத்தியத் தன்மைப் புத்தியை நிவிர்த்திக்காமையின். எவன் நான்காம் பூமிகையை யடைந்தனன் அவன் பிரஹ்மவித் தெனப்படுகின்றான். ஐந்தாம் பூமி

யில் நிர்விகற்பத்தால் அக்கால் ஸ்வயமே வெளி வருகின்முன் ; அந்த யோகி பிரஹ்மவித் வரனும். ஆரூவது பூமியின்கண் பக்கத்தி விருப்பவர்களால் போதிக்கப்பட்டு வெளிப்படுபவன் பிர்ஹ்மவித்வரியானுவன். இப்பூமியிரண்டும் சுழுத்தி என்றும் கூறப்படுகின்றது.

அஸம்பிரக்ஞாத ஸமாதியைப் பிரதிபாதிக்கும் யோக சாஸ்திரங்கள் ஏழு பூமிகளே யடைந்த யோகியின்கண்ணே முடிவு செய்கின்றன. இவ்வித யோகி வெளிக்கிளம்புத லின்றி நிர்விகற்ப ஸமாதியி லிருக்கின்முன். ஏழாம் பூமியி லிருக்கும் பரமஹம்ஸன் பிரஹ்மவித் வரிஷ்டனென்று கூறப்படுகின்முன்.

**6**—6. "மௌநம், யோகாஸநம், யோகம், திதீக்ஷை, அத்தியந்த சீதளத்தன்மை, இச்சை யின்மை, ஸமத்தன்மை இவ்வேழும் ஏக தண்டிகட்காம்" என்பதால் மௌநாதி ஏழாம்.

**6**—7. "ரஸம், உதிரம், மாம்ஸம், மேதை, மச்சை, அஸ்தி, வீர்யம் என்னும் இவை எல்லாத் தேஹத்திலும் ஆசிரயத்திருக்கின்றன" ஆதலால் இவை ஏழு தாதுக்களாம்.

புசிக்கப்பட்ட அன்னம், ரஸரூபமாகப் பரிணமத்தை யடைவது ரஸமெனப்படும். இங்ஙனமே உதிராதி யாண்டும் ரஸரூபத்தன்மை முதலியன அறிக.

**6**—8. தநு வியஸநம், மநோ வியஸநம், தந வியஸநம்,ராஜ்ய வியஸநம்,விப்லவ வியஸநம், உத்ஸாஹ வியஸநம், ஸேவக வியஸநம் என வியஸநம் ஏழாம்.

(1) தநு வியஸநம் உண்டாயின், சரீரம் இளைத்துவிட்டது என ஜீவன் துக்கத்தை யடைகின்முன்.

(2) மனோ வியஸநம் உண்டாயின், திருட்டு முதலிய பயத்தை யுடையவனாகின்றான்.

(3) விப்வ வியஸநம் உண்டாயின், ஜீவன் கிரஹம் க்ஷேத்ரம் முதலியவைகளைச் சம்பாதிக்கும் இச்சை யுடையவனாகின்றான்.

(4) உத்ஸாஹ வியஸநம் உண்டாயின், ஜீவன் புத்ர களத்திராதி இச்சை யுடையவ னாகின்றான்.

(5) ஸேவக வியஸந முண்டாயின், ஜீவன் அந்ய ராஜ்யத்திற் சென்று ஸகல தர்மங்களையும் ரக்ஷிக்கும் இச்சையுடையவனாகின்றான். எஞ்சியவற்றிற்குப் பொருள் வெளிப்படையாம்.

**7**—1. ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, மநாதி நான்கு, பிராணாதி ஐந்து, ஆகாசாதி ஐந்து, காமம், கர்மம், அஞ்ஞாநம் இவை எட்டும் புரி என்னும் புரி அஷ்டகமாம்.

**7**—2. "பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாயம், மநம், புத்தி, அஹங்காரம் இவை எனது பிந்நமான அஷ்டப் பிரகிருதிகளாம்."

**7**—3. யமம், நியமம், ஆஸநம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியாநம், ஸமாதி என அங்கம் எட்டாம்.

இவற்றை நிர்விகற்ப சமாதிக்கு அங்க மெனச் சிலர் கொள்கின்றனர். இப்பக்ஷத்தில் அஷ்டாங்கத்தின்கண் ணுள்ள ஸமாதி சப்தத்தால் ஸவிகற்ப மென்னும் பெயருடைய ஸம்பிரக்ஞாத ஸமாதி கூறப்படுகின்றது. ஸம்பிரக்ஞாத ஸமாதிக்கு இவ் வஷ்டாங்கங்க ளெனச் சிலர் கொள்கின்றனர். இப்

பக்ஷத்தின்கண் அஷ்டாங்கத்தின்கண் ணுள்ள ஸமாதி, ஸம்பிரக்ஞாதத்தினின்றும் பிந்ந மென அங்கீகரிக்க. அங்காங்கிகட்குப் பேதம் அவச்யமாகலின். ஆகவே விட்டுவிட்டு மீண்டும் ஆவிர்த்தி தியாநமாம். ஸாவதாநத்தால் மத்தியில் மறைப்பின்றி ஆவிர்த்தி, அஷ்டாங்கத்தின்கண் ணுள்ள ஸம்பிரக்ஞாத மென்னும் பெயரை யுடைய ஸாதந ஸமாதியாம். நிர்வாணத்தால் மறைப்பின்றி ஆவிர்த்தி அங்கி ஸ்வரூப ஸம்பிரக்ஞாத மென்னும் பெயரையுடைய ஸாத்திய ஸமாதியாம். இப்பேதம் மூன்றுக்கும் விஷயம் ஒன்றாயினும் சித்த பரிபாகத்தின் தாரதம்மியத்தால் அங்கீகரிக்க.

(1) கரசரணாதி அவயவ விசேஷ லக்ஷணத்தினை யுடைய பத்மக, ஸ்வஸ்திகாதிகள் ஆஸநங்களாம்.

இந்திரியங்களைத் தத்தம் விஷயங்களினின்றுந் திருப்புதல் பிரத்தியாஹாரமாம்.

(2) அத்விதீய வஸ்துவின்கண் உள் இந்திரியத்தைத் தரித்தல் தாரணையாம்.

"தர்சநம், ஸ்பர்சநம், கேலி, கீர்த்தநம், குஹ்ய பாஷணம், ஸங்கற்பம், அத்யவஸாயம், கிரியா நிர்விர்த்தி யாய இம்மைதுநத்தைப் புத்திமான்கள் அஷ்டாங்க மெனக் கூறுகின்றனர். இதனி னின்றும் விபரீத பிரஹ்மசர்யம் முமுக்ஷுக்களால் அநுஷ்டிக்கத்தக்கது". என்பதால் இது அஷ்டாங்கமாம்.

(1) ராகபூர்வகமாக ஸ்திரீயாதி விஷயஞாநம் தரிசநமாம். (2) ராகபூர்வகம் கிரியாதி விசேஷ ஜந்ய ஞாநம் ஸ்பர்சநமாம். (3) ராகபூர்வகம் நகைத்தலாதி வியவஹாரம் கேலியாம். (4) அநுராகபூர்வகம் ஸ்திரீயாதியின் ஸௌந்தர்ய முதலியவற்றை வர்ணித்தல்

கீர்த்தநமாம். (5) ராகபூர்வகம் இரகஸ்யத்தில் வார்த்தை யாடல் குஹ்ய பாஷணமாம். (6) ஸ்திரீயாதி விஷயங் களைப் பார்க்கும் இச்சா விசேஷம் இது இருக்கிறது என்னும் ஸங்கற்பமாம். (7) இவளோடு ரமிப்பேன் என்னும் நிச்சயம் அத்யவஸாயமாம். (8) ராகபூர்வ கம் ஸ்திரீயாதி விஷய அநுபவ விசேஷம், கிரியா நிர் விர்த்தியாம்.

**7**—4. தனவான், (ஓர் இடத்தில்) இருப்பவன், பண்டிதன், சக்ரவர்த்தி, குரோதி, மாயிகன், மிகச்செல் பவன், வாஹநமுடையவன் ஆகிய இவர்கட்கு உள்ளே அபிமாநம் இருத்தலால் அந்தரங்க மதம் எட்டாம்.

**7**—5. பிருதிவி, ஜலம், அக்நி, சந்திரன், வாயு, ஆகாசம், சூரியன், ஆத்மா(புத்தி) இவ்வெட்டும் மூர்த்தி (சரீர) மதமாம்.

(1) பிருதிவி மதம் ஆவிர்ப்பவிக்கில் அக்குணத் தால் பூரிக்கப்பட்ட ஜீவன், வஸ்திராதி இச்சை யுடைய வனுகின்றான்.

(2) ஜல மதம் ஆவிர்ப்பவிக்கில் ஸம்ஸாரத்தால் பூரிக்கப்பட்ட ஜீவன், எனக்கு இது அவஶ்யம் செய்யத் தக்கது என்னும் சிந்தையை யுடையவனுகின்றான்.

(3) அக்நி மதம் ஆவிர்ப்பவிக்கில் காம ரஸத்தால் பூரிக்கப்பட்ட ஜீவன், வநிதையின் போக இச்சையில் அதன் அநுகூல வியாபார முடையவனுகின்றான்.

(4) சந்திர மதம் ஆவிர்ப்பவிக்கில், சிந்தையால் பூரிக்கப்பட்ட ஜீவன், செய்யப்படும் காரியம் உண்டாகு மா? அல்லது செய்யில் வேறுவிதம் உண்டாகுமா? என் னும் ஸம்சயத்தால் சும்மாவிருக்கின்றான்.

(5) வாயு மதம் ஆவிர்ப்பவிக்கில், செல்வதால் பூரிக்கப்பட்டவனுய்ப் பரதேச இச்சை யுடையவனுகின்முன்.

(6) ஆகாச மதம் ஆவிர்ப்பவிக்கில், வாஹநத்தால் பூரிக்கப்பட்ட ஜீவன், யானை குதிரை முதலிய இச்சை யுடையவனுகின்முன்.

(7) சூர்ய மதம் ஆவிர்ப்பவிக்கில், குரோதாக்நி பூரிக்கப்பட்டு இது கொல்லத்தக்கது என்னும் இச்சை யுடையவனுகின்முன்.

(8) ஆத்ம மதம் ஆவிர்ப்பவிக்கில் அஹங்காரத்தால் பூரிக்கப்பட்ட ஜீவன், வித்தை முதலியவற்முல் எனக்கு ஸமாநமாக எவ னறிந்திருக்கின்முன் என ஞாநவாணுகின்முன்.

**7**—6. "தயை, சங்கை, பயம், லஜ்ஜை, நிந்தை, குலம், சீலம், தநம் எனப் பாசங்கள் எட்டாம்".

**8**—1. ஞாதா - ஞாநம் - ஞேயம், போக்தா-போக்யம் - போகம், கர்த்தா - கரணம் - கிரியை என ஒரு பக்ஷத்தின்கண் ஸம்ஸாரம் ஒன்பது வகைத்தாம்.

வேறு பக்ஷமு மிருக்கின்றது. அங்ஙனமன்றே, மஹா பூதங்கள் ஐந்து, ஞானேந்திய - கர்மேந்திரிய-பிராணுதிகள் ஐந்து, மநாதி நான்கு, ஸ்தூல சரீரம் ஒன்று, கர்மம் மூன்று, அவஸ்தை மூன்று, இவைகட்குக் காரணமாய அஞ்ஞாநமும் சேர்ந்து ஸம்ஸாரம் ஒன்பது வகைத்தாம்.

**9**—1 "இடை, பிங்கலை, ஸுஷும்னை, காந்தாரி, அஸ்தி ஜிஹ்வை, பூஷா, பயஸ்விநீ, லகுஹா, அலம்புஸா, சங்கிநி என நாடிகை பத்தாம்".

(1) இடை சந்திர நாடியாம்; (2) பிங்கலை சூரிய நாடியாம்; (3) ஸுஷும்னை மத்திம நாடியாம்; (4) காந்தாரி தக்ஷிணநேத்திரத்திற்காம்; (5) அஸ்திஜிஹ்வை வாமநேத்திரத்தின்கண்ணும்; (6) பூஷா தக்ஷிணகாதின் கண்ணும்; (7) பயஸ்விநீ வாமகாதின்கண்ணும்; (8) லகுஹா குதத்தின் நாடியாம்; (9) அலம்புஸா லிங்கத்தின் நாடியாம். (10) சங்கினி நாபியின் நாடியாம் என விவேகிக்க.

9—2. ஹரி, பிரஹ்ம, ருத்ர, இந்திர, வருண, ஈஶ்வர, பத்மோத்பவ (லக்ஷ்மி), பிருதிவி, ஸூர்ய, சந்திரர்கள் எனக்கிரமமாக நாடி தேவதைகள் பத்தாம்.

9—3. பிராண வாயு நீலவர்ணம், அபாந வாயு பச்சை வர்ணம், வியாந வாயு கபிலவர்ணம், உதாநவாயு சந்திர வர்ணம், ஸமாந வாயு நீலவர்ணம், நாக வாயு மஞ்சள்வர்ணம், கூர்ம வாயு வெண்மைவர்ணம், கிருகல வாயு அஞ்சநவர்ணம், தேவதத்த வாயு ஸ்படிகவர்ணம், தநஞ்ஜய வாயு நீலவர்ணம் என வாயுக்களின் வர்ணம் பத்தாம்.

**10**—1. திக்கு, வாயு, ஸூரியன், வருணன், அஶ்வினி குமாரர், அக்நி, இந்திரன், உபேந்திரன் (விஷ்ணு), மிருத்யு, பிரஹ்மா, சந்திரன், பிரஹஸ்பதி, க்ஷேத்திரக்ஞன், சிவன், ஈஶ்வரன் என அதிஷ்டாந தேவதைகள் பதினைந்தாம்.

**10**—2. அஸ்தி, சர்மம், ஸ்நாயு, மஜ்ஜை, நிணம், மாம்ஸம், சுக்ரம், ஶோணிதம், ஶ்லேஷ்மம், த்ராஷிகை, மலம், மூத்திரம், கபம், வாதம், பித்தம் என அஸ்தியாதி பதினைந்தாம்.

இப்பதினைந்தின் ஸமுதாய ரூபம் ஸ்தூல சரீர மென அறிக.

**11**—1. ராகம், த்வேஷம், காமம், குரோதம, லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், ஈரிஷை, அஸூயை, தம்பம், தயை, அஹங்காரம், இச்சை, பக்தி, சிரத்தை என ராகாதிகள் பதினாறும்.

இவற்றின் மத்தியில் பக்தி சிரத்தைகள் முக்திக்கு ஹேதுவாம். இச்சையோ முக்திக்கும், பந்தத்திற்கும் ஹேதுவாகின்றது; ஏனைய, பந்த ஹேதுக்களாம் என விவேகிக்க.

**11**—2. கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, பிராணாதி ஐந்து, அந்தக்கரணமுஞ் சேர்ந்து பதினாறும் லிங்கம் எனச் சிலர் கூறுகின்றனர். இதனை ஸூக்ஷ்ம சரீர மென அறிக.

**12**—1. "பிராணன் ஐந்து, மநம்-புத்தி, இந்திரியம் பத்து, அபஞ்சிகிருத பூதத்தினின்று முண்டாய இவை ஸூக்ஷ்ம சரீரமும், போக ஸாதநமுமா மாக லின்" பதினேழு அவயவங்களை யுடையது லிங்கம் எனச் சிலர் பக்ஷமாம்.

**13**—1. முற்புகன்றதோடு சித்தமும், அஹங்காரமும் சேர்ந்து பத்தொன்பதும் லிங்கம் என வேறு பக்ஷமாம்.

**14**—1. ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பிராணாதிகள் ஐந்து, சப்தாதிகள் ஐந்து, மநாதி நான்கும் சேர்ந்து இருபத்து நான்கு தத்துவ மெனச் சிலர் கூறுகின்றனர்.

**15**—1. முற் புகன்ற தத்துவங்களோடு பஞ்சீகிருத பூதம் ஐந்து, அவஸ்தை மூன்று, சரீரம் மூன்று, அஞ்ஞானமும் சேர்ந்து முப்பத்தாறு தத்துவங்களெனச் சிலர் கூறுகின்றனர்.

**16**—1. "இப்பொழுது எழுபத்தைந்து குணங்கள் கூறப்படுகின்றன.

அஸ்தி, மாம்ஸம், த்வக், நாடி, ரோமம் ஆகிய ஐந்தும் பிருதிவியின் குணங்களாம்; பிருதிவியின் அம்சமென்றும் கூறப்படுகின்றது.

கபம், மூத்ரம், வியர்வை, சுக்ரம், சோணிதம் ஐந்தும் ஜலத்தின் குணங்களாம்; அதன் அம்சமென்றுங் கூறப்படுகின்றது.

பசி, ஆசை, நித்திரை, ஆலஸ்யம், ஸங்கம் ஐந்தும் அகநியின் குணங்களாம்; அதன் அம்சமென்றுங் கூறப்படுகின்றது.

ஓடுதல், நடத்தல், சுருங்குதல், விரிதல், தனிமையாகுதல் ஐந்தும் வாயுவின் குணங்களாம்.

இராகம், த்வேஷம், பயம், லஜ்ஜை, மோஹம் என ஐந்தும் ஆகாசத்தின் குணங்களாம்; அதனம்சமென்றுங் கூறப்படுகின்றது".

ஆகவே பிருதிவிக்கு சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்த ஸ்வரூப ஐந்துகுணமுடைமையின், சப்தாதி ஐந்துகுண சம்பந்தமுடைய பிருதிவியின்கண் இருபத்தைந்து குணங்கள் பிராப்தமாம்; ஒவ்வொரு சப்த குணாதிகட்கு ஐந்து விசேஷ குணத்தன்மை கூறியிருத்தலின்,

அங்ஙனமே, ஜலத்திற்கு இருபது குணங்களாம். அக்நிக்குப் பதினைந்து குணங்களாம். வாயுவிற்குட் பத்துக் குணங்களாம். ஆகாசத்திற்கு ஐந்து குணங்களாம். இவ்வெல்லாம் ஒன்றுகூடி எழுபத்தைந்து குணங்களாகின்றன என்று வல்லுனரால் பகுத்தறிக.

**17**—1. 15-1-ல் முன்புகன்ற தத்துவங்களோடு காவவிகாரம் ஆறு, ஊர்மிஆறு, கோசம் ஆறு, சத்ருவர்க்கம் ஆறு, ஜகத் மூன்று, குணம் மூன்று, கர்மம் மூன்று, வசநாதி ஐந்து, ஸங்கற்பாதி நான்கு, மைத்திரியாதி நான்கு, அஞ்ஞாந அதிஷ்டாந ஈஸ்வரனினின்றும் பிந்நமாய திக்கு, வாயு, ஸூர்யாதி அதிஷ்டாந தேவதை பதினான்கும் சேர்ந்து தொண்ணூற்றாறு தத்துவங்களெனச் சிலர் கூறுகின்றனர்.

ஆகவே அஸங்க அத்விதீயப் பிரஹ்மத்தினைப் பிரதிபாதிக்கும் வேதாந்த சாஸ்திரத்தின்கண் பெரியோர் வசநத்தை யநுஸரித்து அத்தியாரோப வசத்தால் ஸம்ஞைகள் (பெயர்கள்) இருக்கின்றன வெனப் பிரதிபாதிக்கப்பட்டது.

இப்பொழுது அபவாத லக்ஷணமாம்.

அதிஷ்டாந மாத்திரமாக எஞ்சுதல் அபவாதமாம்.

ஆகவே, ஸர்வப் பிரபஞ்ச ரகிதப் பிரஹ்மம் நான் என்னும் பிரத்திய கபிந்ந பிரஹ்ம ஞாநத்தால் மோக்ஷமுண்டாகு மென்பது சித்தமாயிற்று.

வேதாந்த சஞ்ஞாப் பிரகரணம் ஸம்பூர்ணம்.

---

வீரசேகராய நமோ நம:.

சுபம் அஸ்து.

# பிழை திருத்தம்.

| க்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| சவுரை | 12 | 144 | 142 |
| 7 | 13 | 5-6-7. | 4-5-6. |
| ,, | 15 | 2-வர்ணம். | இல்லையென்று நீக்க |
| 11 | 9 | தஸ்தூல | ஸ்தூல |
| ,, | 14 | ஸூக்ஷம | ஸூக்ஷ்ம |
| 12 | 2 | ஜலாசமயம் | ஜலாசயம் |
| ,, | 4 | மாகலனும் | மாகலானும் |
| ,, | 6 | சோசம் | கோசம் |
| ,, | 9 | யென | யெனச் |
| 3 | 25 | விலக்ஷணபிரஹ்ம | விலக்ஷணப்பிரஹ்ம |
| 4 | 2 | அகர்த்ருபிரஹ்ம | அகர்தருப்பிரஹ்ம |
| 6 | 3 | சமஸ்த பிராணி | சமஸ்தப்பிராணி |
| ,, | 10 | ஸூக்ஷம | ஸூக்ஷ்ம |
| 17 | 2 | ஸூக்ஷம | ஸூக்ஷ்ம |
| ,, | 10 | வசிஷ்ட | விசிஷ்ட |
| 9 | 1 | நிஷ்மகாம | நிஷ்காம |
| ,, | 5 | சுரீர | சரீர |
| 0 | 1 | கர்மத்தாற்<br>கார்யத்தாற் | கர்மத்தால்<br>காரியத்தால் |
| ,, | 19 | பதார்த்கங்கட்கு | பதார்த்தங்கட்கு |
| ,, | 23 | பிரத்யகாத்மாகட்காம் | பிரத்யகாத்மாக்கட் |
| ,, | 25 | தேவத்தத்தன் | தேவதத்தன் (காம் |
| ,, | 26 | கப்தங்கட்கு | சப்தங்கட்கு |
| 21 | 16 | வாச்சியார்த்தின் | வாச்சியார்த்தத்தின் |

| | | | |
|---|---|---|---|
| 23 | 21 | வர்த்த மானக்காலம் | வர்த்தமானகா |
| 24 | 2 | விசேணங்கள் | விசேஷணங்க |
| 25 | 20 | யின்றயதோடு | யின்றியதோடு |
| 26 | 9 | அஹங்காாத்திற்கு | அஹங்காரத்திற் |
| ,, | 23 | பிரஹமாத்ம | பிரஹ்மாத்ம |
| 27 | 4 | முன்றும் | மூன்றும் |
| ,, | 13 | பிராப்த | பிராரப்த |
| 28 | 2 | ராஜதாதி | ரஜதாதி |
| 29 | 19 | விஷயத்திகண் | விஷயத்தின்க |
| 32 | 24 | என | எனப் |
| 33 | 21 | எறிக | அறிக |
| 35 | 2 | ஈஶ்வரப் | ஈஶ்வர |

## திருப் பூவண மடாதிபதி,
## காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்
## இயற்றியன, பதிப்பித்தன.

| | | ரூ. அ |
|---|---|---|
| 1. | வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா—வசநம் | 2- |
| 2. | விசார சாகரம்—வசநம் | 2- |
| 3. | ஞாந வாசிட்டம்—கவி (2055) | 2- |
| 4. | கீதாத் திரயம்—கவி (1430) பாக்கெட் சைஸ் | 1- |
| 5. | வேதாந்த சாஸ்திர ரத்நாவலி—கவி (1135) | 1- |
| 6. | வீர சேகர ஞாந தேசிக சரிதம்—வசநம் | 1- |
| 7. | ஹரி மீடே— ஹரி தத்வ முக்தாவலீ—வசநம் | 0- |
| 8. | நைஷ்க்கர்ம்ய சித்தி—வசநம் | 0- |
| 9. | வியாச தாத்பர்ய நிர்ணயம்—வசநம் | 0- |
| 10. | வேதாந்த சித்தாந்த முக்தாவலீ—வசநம் | 0- |
| 11. | வைராக்ய தீபம்–பத வுரையும், பொழிப் புரையும் | 0- |
| 12. | வேதாந்த பரிபாஷை—வசநம் | 0- |
| 13. | ஸ்வா ராஜ்ய சித்தி—வசநம் | 0- |
| 14. | சீடாசாரம்—பால போதிநி—உரை | 0- |
| 15. | ஈசாவாஸ்யோபநிஷத்—சங்கர பாஷ்யம் | 0- |
| 16. | மண்டலப் பிராஹ்மணோபநிஷத்—ராஜ யோக | 0- |
| 17. | கைவல்ய நவநீதம் கவி (288) [பாஷ்யம் | 0- |
| 18. | பக்தி (வைராக்ய) சதகம்—தோத்திரப் பிரகாச | 0- |
| 19. | வேதாந்த சஞ்ஞா—வசநம் [உரை | 0- |
| 20. | பகவற் கீதை கவி (545) பாக்கெட் சைஸ் | 0 |
| 21. | பிரஹ்ம கீதை கவி (547) பாக்கெட் சைஸ் | 0 |
| 22. | ஈசுவர கீதை கவி (338) பாக்கெட் சைஸ் | 0 |
| 23. | சிவ சங்கராவதாரம் | 0· |